விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26

ஒலி 205 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 28 சனிக்கிழமை (12.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

ஈழத் திரையின் ஏற்பாட்டில்
கண்ணகி பத்தினிகள் ஆவணப்படம்
திரையிடலும் கலந்துரையாடலும்
காலம் : இன்று 12.07.2025
நேரம் : காலை 10.30
இடம் : ஈழத்திரை செல்வா மினி திரையரங்கு, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
அனுமதி இலவசம்
(4777)
077 651 0375
SCOPE

## க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின
### 2,37,026 மாணவர்கள் உயர்தரத்துக்குத் தகுதி

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியாகின.

இதன்படி 237,026 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.வேம்படியில் 120 பேருக்கு 9A

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 120 மாணவிகள் 9ஏ பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 265 மாணவிகள் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.இந்துவில் 82 பேருக்கு 9A

(யாழ்ப்பாணம்)

வெளியாகியுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 82 மாணவர்கள் 9ஏ பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

நடைபெற்ற கல்விப் 15ஆம் பக்கம் பார்க்க

# ராஜித சேனாரத்னவை கைது செய்க



### கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனுவெல நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நவம்பர் 10ஆம் திகதி உயர்தர பரீட்சை ஆரம்பம்

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை எதிர்வரும்

15ஆம் பக்கம் பார்க்க

## 2025ஆம் ஆண்டு 66 துப்பாக்கி சூட்டு சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

2025ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஜூலை மாதம் 11ஆம் திகதி வரையான

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாண மாவட்டத்தின் 8 பிரதேச செயலகங்களுக்கு
### புதிய செயலாளர்களை நியமிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் 8 பிரதேச செயலகங்களுக்கு புதிய செயலாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கோப்பாய் பிரதேச செயலாளராக தற்போதைய கரைத்துறைப்பற்று பிரதேச 04ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழியின் உண்மையைக் கண்டறிவது அவசியம்
### இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியின் உண்மையைக் கண்டறிவது மிகவும் அவசியம் என இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கையொப்பத்துடன் குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் நடந்துவரும் செம்மணிப் புதைகுழி 15ஆம் பக்கம் பார்க்க

## வரியைக் குறைக்க தொடர்ந்து பேச்சுவார்த்தை
### சபையில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ

(கொழும்பு)

அமெரிக்கா விதித்துள்ள வரி வீதத்தைக் குறைக்க அமெரிக்க பிரதிநிதிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம் என தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று 04ஆம் பக்கம் பார்க்க

## சிறுப்பிட்டியில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை (11) காலை மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதே இடத்தைச் 15ஆம் பக்கம் பார்க்க

## மோ.சைக்கிள் விபத்து இளைஞன் உயிரிழப்பு
### வவுனியாவில் பொலிஸார் தடியை நீட்டி இளைஞனை மறித்தபோது விபரீதம்

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனை பொலிஸார் தடுத்து நிறுத்த முயன்றபோது ஏற்பட்ட விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதனால் நேற்றிரவு 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
### க.பொ.த (உ/த) 2027 மாணவர் அனுமதி

க.பொ.த (உ/த) 2027 பிரிவுக்குரிய புதிய மாணவர்களின் அனுமதிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவத்தை ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 21.07.2025 என்பதனை அறியத் தருகின்றேன்.

அதிபர்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
யாழ்ப்பாணம் (C-3385)

## சதாபொன்ஸ் கல்வி நிலையம்
### மாலி சந்தி, அல்வாய்

**O/L மீட்டல் வகுப்புக்கள்**

ஆரம்பம் நாள் : 14.07.2025 திங்கள்
நேரம் : காலை 7.15

அனுமதி இன்று முதல்

**077 3095 176, 021 226 3206, 076 126 0105** (C-3391)

## கோழி குஞ்சுகள் விற்பனைக்குண்டு

சுதுமலைதெற்கு மானிப்பாயிலுள்ள பண்ணையில் தடுப்பு மருந்துகள் மற்றும் வக்சின் முறைப்படி கொடுக்கப்பட்ட 400 கிராமுக்கு மேலான நிறை உடைய 1½ மாத கழுத்து வெட்டி கோழி குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
மேலதிக விவரங்களுக்கு. (C-3388)

**077 327 1713**

## யாழ். கொட்டடி சனசமூக நிலையம்
## மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி - 2025

எமது சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டி நடைபெற உள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த எவரும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.



| | |
|---|---|
| முதல் பரிசு | : 10,000.00 ரூபா |
| இரண்டாம் பரிசு | : 7500.00 ரூபா |
| மூன்றாம் பரிசு | : 5,000.00 ரூபா |

மேலும் 10 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.
பின்வரும் இடங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, பூரணப்படுத்தி வழங்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**சரவணா அச்சகம்,**
இல. 200, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

**ஜெகதா மொபைல் உலகம்,**
இல. 60, ஆஸ்பத்திரி வீதி,
சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 21.07.2025**

மேலதிக தகவல்களுக்கு :
பெ. திருச்செல்வன் (விளையாட்டுப் பொறுப்பாளர்) -0779237714

அன்றைய தினம் மாலை சனசமூக நிலையத்தருகே நிலைய எல்லைக்குட்பட்டோர் மட்டும் பங்குபற்றும் கலாச்சார விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

செயலாளர்
யாழ். கொட்டடி சனசமூக நிலையம்
50, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (4776) 12.07.2025

## யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
### க.பொ.த உயர்தரம் - 2027
### மாணவர் அனுமதி

க.பொ.த. சா/த - 2024(2025) சிறந்த பெறுபேறுகளைப் பெற்று க.பொ.த உ/த - 2027 பிரிவில் இணைந்து கற்க தகுதி பெற்ற மாணவர்கள் பின்வரும் துறைகளுக்காக விண்ணப்பிக்கலாம். 14.07.2025 (திங்கட்கிழமை) முதல் விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

1. கணிதப் பிரிவு
2. விஞ்ஞானப் பிரிவு
3. வர்த்தகப் பிரிவு
4. கலைப்பிரிவு
5. தொழில்நுட்பப் பிரிவு

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 25.07.2025

குறிப்பு:- கற்றலில் ஆர்வமுள்ள பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு உலகளாவிய பழைய மாணவர் ஒன்றியத்தினால் கற்றல் வசதிகளும், பொருளாதார வசதிகளும் பெற்றுத் தரப்படும்

(C-3386) அதிபர்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## வேலையாட்கள் தேவை

- ♦ நிறுவன கிளை நடத்துனர் - மல்லாகம் 40 வயதுக்கு மேல்
- ♦ கிளை மேற்பார்வையாளர் - 40 வயதுக்கு மேல் ஆண்
- ♦ விற்பனை உதவியாளர் - ஆண்
- ♦ மில் வேலை தெரிந்தவர்கள் - ஆண்/பெண்

தொடர்பு : **076 44 00 816** (1321)

# மரண அறிவித்தல்

மலர்வு 31 - 07 - 1952



உதிர்வு 10 - 07 - 2025

## தம்பிப்பிள்ளை மகேஸ்வரன் [ஈசன்]
### (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி ஊழியர்)

திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை மகேஸ்வரன் அவர்கள் கடந்த வியாழக்கிழமை (2025.07.10) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை(business) - வைரமணி தம்பதிகளின் அன்பு புதல்வனும் காலஞ்சென்ற செல்வராசா (ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்) - தங்கமணி தம்பதிகளின் மருமகனும் மனோரதி அவர்களின் அன்புக் கணவரும் சுகந்தி (London), அர்ச்சனா(Canada), துஷாந்த்(Canada), துஷாந்தீ ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாஸ் (London), மோதிலால் (Canada) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் யதோசன், அருன்யா, அக்ஷயா (London) அக்ஷிகா, சஷ்டிகா (Canada) ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் யோகம் அவர்களின் பாசமிகு சகோதரனும் மனோகரன், மனோரஞ்சன், மனோராஜி, மனோரதன், மனோதரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை 2025.07.13 காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர் (1320)

# RAVEENS EMC

Singathin Veedu, Karaveddy East, Karaveddy.

### G.C.E O/L Results - 2024 (2025)
### ENGLISH MEDIUM

| NO | Name | Results | English | Maths | Science | History | Tamil | Religion | ICT | Commerce | English Literature |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | U.Tharun | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 2 | G.Parvithan | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 3 | T.Agsajan | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 4 | G.Sharujana | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 5 | R.Darunyah | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 6 | M.Abishaya | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 7 | K.Yathusa | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 8 | S.Akshara | 9A | A | A | A | A | A | A | A | A | A |
| 9 | P.Mathusika | 9A | A | A | A | A | A | A | A | | A |
| 10 | S.Sayan | 8A,B | A | A | A | A | A | A | A | A | B |
| 11 | S. Babeezanan | 7A,2B | A | A | B | A | A | A | A | A | B |

- ◆ P.Mathusika got A in Shihala instead of Commerce.
- ◆ Total number of students eleven (11)

P.Easwaranathan
Director (C-3384)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணிப் புதைகுழி தொடர்பில் பிரித்தானியாவின் நிலை என்ன?

## பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் கேள்வி

**(லண்டன்)**

**செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அகழ்வுப் பணிகளைத் துரிதப்படுத்தி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தர பிரித்தானியாவின் முனைப்பு என்ன என ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

பிரித்தானியாவின் வெளி விவகார குழுவின் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நீங்கள் இறுதியாக இந்தக் குழுவின் முன்னிலையில் 2024 நவம்பரில் தோன்றிய போது நான் தமிழ் மக்களிற்கான நீதி குறித்து உங்களிடம் கேள்வி எழுப்பியிருந்தேன்.

இந்த விடயம் குறித்து நீங்கள் கொண்டிருக்கும் தனிப்பட்ட அர்ப்பணிப்பிற்காகவும் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக தமிழ் சமூகத்திற்கு நீங்கள் வெளிப்படுத்திய ஆதரவிற்கும் எனது நன்றி என வெளி விவகார அமைச்சர் டேவிட்லமியிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மோதலின் போது பாரதூரமான மனித உரிமை மீறல்கள் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மார்ச் மாதம் பிரித்தானிய தடைகளை அறிவித்தமை குறித்து நான் திருப்தி அடைகிறேன்.

சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் சட்டத்திற்கு புறம்பான கொலைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக. இது அந்த சமூகத்திற்கு இந்த தருணத்தில் மிகவும் முக்கியமான விடயம்.


ஆனால் கவலை அளிக்கும் விதத்தில் கடந்த மாதம் இலங்கையின் வடபகுதி யாழ்ப்பாணத்தில் செம்மணியில் மற்றொரு மனித புதைகுழியை கண்டுபிடித்துள்ளனர்.

அந்த புதைகுழியில் மூன்று குழந்தைகளின் உடல்களையும் கண்டுபிடித்துள்ளனர். புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள மனித புதைகுழிகளை சர்வதேச தராதரத்தின் கீழ் அகழ்வு செய்வதற்கான போதிய வளங்கள் இலங்கையில் இல்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் தெரிவித்திருந்தது.

பிரித்தானிய அரசாங்கம் இந்த விடயம் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதா? மனித புதைகுழிகளை அகழும் நடவடிக்கைகளிற்கு பிரித்தானிய உதவிகளை வழங்குகின்றதா என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் கேள்வி எழுப்பியுள்ளார். (க)

# ட்ரம்ப் கைவிட்டாலும் ஜூலி கைவிடார்

# மருத்துவ உபகரணங்களை வழங்க சம்மதம் தெரிவித்த அமெரிக்கா



(கொழும்பு)

நாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களை நன்கொடையாக வழங்குவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கிடையில் அமைச்சில் கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போது மருந்துகள் மற்றும் சுகாதார சேவைகள் வழங்குவது தொடர்பாக விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது அமெரிக்க தூதுவர் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களை வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ளார்.

நாட்டில் இலவச சுகாதார சேவை மற்றும் ஊடகத் துறையின் தற்போதைய நிலை மற்றும் அதன் எதிர்கால வளர்ச்சி குறித்தும் இந்த சந்திப்பின் போது விரிவாக விவாதிக்கப்பட்டது.

டெங்கு மற்றும் சிக்கன் குன்யா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குக் குறுகிய கால மற்றும் நீண்டகாலத் திட்டங்களைத் தயாரிப்பது, இந்த திட்டங்களை எவ்வாறு ஆரம்பிப்பது, அத்துடன் சுகாதாரப் பாதுகாப்பு முறைகள் குறித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தச் சிறப்புத் திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் இந்த நோய்களைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பது குறித்து சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, அமெரிக்கத் தூதரிடம் விளக்கினார். (க-8)

# அநுர அரசாங்கத்தில் முன்னேற்றம் தெரிகிறது

## புகழும் பொன்சேகா

(கொழும்பு)

ஊழல் மோசடி மற்றும் பாதாள உலக செயற்பாடுகளை முற்றாக ஒழிப்பதென்றால் தான் அண்மையில் ஊடகங்களைச் சந்தித்து பட்டிணி கிடக்கவும் நாம் தயார் என்று பீல்ட்மார்சல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஊடகங்களைச் சந்தித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அநுர அரசின் ஆட்சி ஏனைய அரசாங்கங்களுடன் ஒப்பிடும் போது மேம்பட்டதாகவே காணப்படுகிறது.போதை மற்றும் பாதாள குழுக்களை முற்றாக ஒழித்தால் நாட்டுக்குக் கட்டாயம் நன்மை பயக்கும்.

அரசின் சில செயற்பாடுகளே பின்னடைவாக காணப்படுகின்றன. தற்போது பொது மக்களின் சொத்துக்கள் முறைகேடாக பயன்படுத்துவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை செயற்படுத்துவதில் அரசு ஓரளவு முன்னோக்கிச் சென்றுள்ளது.

போதைப் பொருள், இளைஞர் சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. போதைப் பொருளை முற்றாக அரசு கட்டுப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தாலே இளைஞர் சமூகத்தைக் காப்பாற்ற முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (க-8)

# கழுகின் கரங்கள் இறுக பிரித்தானியாவின் கைகள் இழகுகின்றன

## மகிழ்வில் ஏற்றுமதியாளர்கள்

(கொழும்பு)

இலங்கை உட்பட வளர்முக நாடுகளிலிருந்து பிரித்தானியாவுக்கான இறக்குமதியை இலகுபடுத்தும் வகையில் புதிய வர்த்தக நடவடிக்கைகளை பிரித்தானிய அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி ஆடைகள், உணவுப் பொருட்கள், மின்னணுவியல் சாதனங்கள் போன்றவை இந்தச் சலுகையின் கீழ் வரும் பொருட்களின் பட்டியலில் அடங்குகின்றன.

இதன் மூலம், அந்த நாடுகள் பிரித்தானியாவுக்கு சுங்க வரியின்றி அதிகமான பொருட்களை ஏற்றுமதி செய்யலாம் என பிரித்தானிய வணிகம் மற்றும் வர்த்தகத் துறை தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, பிரித்தானியாவுடனான வர்த்தக உறவுகளை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை உட்பட பல நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா இறக்குமதி வரியை அறிவித்துள்ள நிலையில். பிரித்தானியாவில் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளமை ஏற்றுமதியாளர்களுக்கு வயிற்றில் பால் வார்த்ததைப் போல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# அநுர அரசை விமர்சித்தால் அழைப்பாணை வரும்

## விமல் வீரவன்ச

(கொழும்பு)

அநுர அரசாங்கத்துக்கு எதிராக பேசுபவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்படுகிறார்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் பற்றிய விடயங்களை குறிப்பிட்டு மக்களுக்கு அதனை அறிவுறுத்தியவர்கள் தற்போது அரசினால் இலக்கு வைக்கப்பட்டுள்ளார்கள்.


கொள்கலன் விடுவிப்பு விவகாரம், பேச்சு சுதந்திரம் திட்டமிட்ட வகையில் மறுக்கப்படுகிறது. அரசாங்கத்துக்கு எதிராக பேசுபவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்படுகிறார்கள்.

முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு வழங்கிய தகவல்களுக்காக நானும் கொழும்பு குற்றத் தடுப்பு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தேன், அங்கு சென்று வாக்குமூலமும் அளித்திருந்தேன் என்றார். (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய மாஸ்ரேஸ் மெய்வல்லுனர்
# யாழ். வீரர் சாதனை



இலங்கையில் 38 ஆவது தேசிய மாஸ்ரேஸ் மெய்வல்லுனர் போட்டிகள் கடந்த 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் கொழும்பு டிய கம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடை பெற்றது.

இப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த செல்வராஜா ரமணன் 45-49 வயதுப் பிரிவில் பங்கு பற்றி தேசிய ரீதியாக சாதனை படைத்துள்ளார்.

இவர் தேசிய கோலூன் றிப் பாய்தல் போட்டியில் 2.81m உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், உயரம் பாய்தலில் 1.55m வரை பாய்ந்து அதிலும் தங்கப்பதக்கத்தைக் கைப் பற்றிச் சாதனை படைத் துள்ளார்.

இந்நிலையில் இவர் எதிர்வரும் நவம்பர் மாதம் இந்தியாவில் இடம்பெற வுள்ள 22 ஆவது ஆசிய மாஸ்ரேஸ் மெய்வல்லு னர் போட்டியில் பங்குபற்று வதற்கான தகுதியினை பெற்றுள்ளமையும் குறிப் பிடத்தக்கது (3)

## இலங்கை – பங்களாதேஷ் ரி–20 தொடர்
# குசல், நிஸ்ஸங்க அதிரடி ஆட்டம்
## பங்களாதேஷை அதிர வைத்த இலங்கை



பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது இருப துக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 154 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அணி சார்பில், பர்வேஸ் ஹொசைன் எமோன் அதிக பட்சமாக 38 ஓட்டங் களையும் முஹமட் நைம் ஆட்டமிழக்காது 32 ஓட்டங் களையும் பெற்றுக்கொண் டனர்.

இதன்படி, 155 ஓட்டங் களை வெற்றியிலக்காக கொண்டு பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி 19 ஓவர்கள் நிறை வில் 3 விக்கெட்டுகள் இழப் பிற்கு 159 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

அணி சார்பில், பெத்தும் நிஸ்ஸங்க 42 ஓட்டங் களையும் குசல் பெரேரா 24 ஓட்டங்களையும் குசல் மெண்டிஸ் 73 ஓட்டங் களையும் பெற்றுக்கொண்ட னர். (3)

### யாழ்ப்பாண...

செயலாளர் ச.மஞ்சுளாதேவி நியமிக்கப்படவுள்ளார். உடு வில் பிரதேச செயலாளராக பிறேமினி பொன்னம்பலமும் பருத்தித்துறை பிரதேச செய லாளராக ந.திருலிங்கநாத னும் சாவகச்சேரி பிரதேச செயலாளராக பி.சத்தியசோதி யும் நெடுந்தீவு பிரதேச செய லாளராக பிரபாகரனும் நிய மிக்கப்படுகின்றனர்.

இதேபோன்று சண்டிலிப் பாய் பிரதேச செயலாளராக கு.பிரபாகரமூர்த்தியும் மரு தங்கேணி பிரதேச செயலா ராக உஷா சுபலிங்கமும் வேல ணைப் பிரதேச செயலாளராக ரி.அகிலனும் நியமிக்கப்படு கின்றனர். யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதி பர் (காணி) பதவியில் தற் போதைய உடுவில் பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் நியமிக்கப்படுகின்றமையோடு சமுர்த்தி பணிப்பாளராக ஸ்ரீவர் மன் நியமிக்கப்படுகின்றார்.

இந்த நியமனங்களிற் கான சிபார்சை உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை அமைச்சு, பணிப்பாளர் இல ங்கை நிர்வாகசேவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் பிரதிகள் மாவட்ட அரச அதி பர் மற்றும் மாகாண பிரதம செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-7)

### வரியைக் ...

வெள்ளிக்கிழமை (11) நடை பெற்ற அமர்வின்போது அமெ ரிக்காவினால் விதிக்கப்பட்ட 30 சதவீத பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் எதிர்க்கட்சி களின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக முன் வைத்த கேள்விகளுக்கு பதி லளிக்கையில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது,

புதிய பரஸ்பர வரி தொடர் பில் அமெரிக்காவின் பிரதிநிதி களுடன் முதல் கட்டமாக நிகழ்நிலை முறைமை ஊடாக கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. அதனைத் தொடர் ந்து இலங்கையின் பிரதிநிதி கள் இரண்டு முறை அமெரிக் காவுக்குச் சென்று அந்நாட்டின் வர்த்தகத்துறைப் பிரதிநிதி களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

அமெரிக்காவுடனான இரு தரப்பு ஒப்பந்தம் எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதிக்குள் கைச்சாத்திடப்படாவிடின் இரண்டாம் கட்டமாக அறிவிக் கப்பட்ட 30 சதவீத தீர்வை வரி அமுல்படுத்தப்படும். ஆகவே 30 சதவீத தீர்வை வரி வீதத்தை குறைத்துக் கொள்வதற்கு அமெரிக்க பிரதிநிதிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட் டுள்ளோம் என்றார். (ம-7)

# 5 பந்துகளில் 5 விக்கெட்டுக்கள்
## அயர்லாந்து வீரர் வரலாற்றுச் சாதனை



அயர்லாந்தில் உள்ளூர் ரி-20 கிரிக்கெட்டில் கர்டிஸ் காம்பெர் என்ற வேகப்பந்து வீச்சாளர் தொடர்ச்சியாக 5 பந்துகளில் 5 விக்கெட் வீழ்த்தி புதிய சாதனை படைத் துள்ளார். டப்ளினில் நடந்த இன்டர் புரோவின்சியல் ரி-20 கிரிக்கெட் தொடரின் ஒரு ஆட்டத்தில் மன்ஸ்டர் ரெட்ஸ் அணி நிர்ணயித்த 189 ஓட்ட இலக்கை நோக்கி ஆடிய நார்த் வெஸ்ட் வாரியர்ஸ் 13.3 ஓவர்களில் 88 ஓட்டங்களில் சுருண்டு தோல்வி கண்டது.

மன்ஸ்டர் ரெட்ஸ் அணி யின் வேகப்பந்து வீச்சாள ரான கர்டிஸ் காம்பெர் 2.3 ஓவர் வீசி 16 ஓட்டங்கள் மட்டுமே விட்டுகொடுத்து 5 விக்கெட்டுகளை அள்ளி னார். அவர் தனது 2ஆவது ஓவரின் கடைசி இரு பந்தில் 2 விக்கெட்டும், 3ஆவது ஓவரின் முதல் 3 பந்துகளில் 3 விக்கெட்டும் சாய்த்தார்.

தொழில்முறை கிரிக்கெட் டில் ஒரு வீரர் தொடர்ந்து 5 பந்துகளில் விக்கெட்டை அறுவடை செய்திருப்பது இதுவே முதல் முறை யாகும். 26 வயதான கர்டிஸ் காம்பெர் அயர் லாந்து அணிக்காக சர்வ தேச போட்டிகளில் ஆடி வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது. (3)

# சர்வதேச ரி-20 லீக் தொடரில்
# 8 இலங்கையர்கள் தெரிவு

ஐக்கிய அரபு இராச்சியத் தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள சர்வதேச ரி-20 லீக் தொட ரில் இலங்கையைச் சேர்ந்த எட்டு வீரர்கள் தெரிவாகியுள் ளனர்.

நடப்பு சம்பியனான டுபாய் கெபிட்டல்ஸ் அணி, தசுன் ஷானக்கையும், துஷ்மந்த சமீரவையும் தக்கவைத் துள்ளது. சரித் அசலங்க அபுதாபி நைட் ரைடர்ஸ் அணிக்காக தக்க வைக்கப் பட்டுள்ளார்.

வனிந்து ஹஸரங்க டெசர்ட் வைப்பர்ஸ் அணி யில் தொடர்ந்து தக்க வைக் கப்பட்டுள்ளார். எம்.ஐ எமி ரேட்ஸ் அணி கமிந்து மெண்டிஸை ஒப்பந்தம் செய்ய, மஹீஷ் தீக்ஷன சார்ஜா வொரியர்ஸ் அணிக் காக ஒப்பந்தமாகியுள்ளார்.

மேலும் குசல் பெரேரா எம்.ஐ எமிரேட்ஸ்அணியி லும், குசல் மெண்டிஸ் சார்ஜா வொரியர்ஸ் அணி யிலும் இடம்பெற்றுள்ள னர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரியம் உயர்ந்தால் நாடு முன்னேற்றமடையும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வரலாற்று பாரம்பரியத்துடன் இயல்பான நல்லுறவு இல்லாமல் ஒரு சமூகமாக முன்னேறுவது சாத்தியமில்லை. அதற்கேற்ப நாட்டின் அபிவிருத்திப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் புனிதஸ்தலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

உலகில் வளர்ச்சியடைந்ததாகக் கருதப்படும் ஒவ்வொரு நாடும் அதன் வரலாற்று பாரம்பரியத்தைப் பாதுகாத்ததன் மூலமே அந்த வளர்ச்சியை அடைந்துள்ளது.

ஒரு நாடாக, நாமும் நமது வரலாற்று பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்திப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நமது சமூகத்தை ஒரு கலாசார சமூகமாக மாற்ற புத்த மதம் உதவியது என்றும், பௌதீக வளங்களை முழுமைப்படுத்த முயற்சிக்கும் சமூகத்தில், மறைந்து வரும் சமூக மதிப்புகள் மற்றும் பண்புகள் மீண்டும் மீட்சிபெற, இவ்வாறான கலாசார நிகழ்வுகள் வாய்ப்பளிக்கிறது என்றும் ஜனாதிபதி இங்கு தெரிவித்தார். (க-8)

# ஆடு-மாடு அவமானமல்ல வெகுமானம்-சீறும் சீமான்

(கொழும்பு)

ஆடு, மாடுகளை மேய்ப்பது அவமானம் அல்ல. அது வெகுமானம் என்பதை உணராதவரை, நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையாது என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

மதுரையில் "மேய்ச்சல் நிலம் எங்கள் உரிமை" என்ற ஆடு, மாடுகளின் மாநாடு ஒன்று நாம் தமிழர் கட்சியின் சார்பில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆடு, மாடுகள் இன்றி இயற்கை விவசாயம் கிடையாது. பால் இருக்கும் வரை நாட்டில் பசி பட்டினி இருக்காது.

தமிழகத்தில் 12 இலட்சம் ஹெக்டேயர் மேய்ச்சல் நிலம் உள்ளது. எனினும் அவற்றை ஆக்கிரமித்து அழித்துவிட்டனர். தமிழகத்தில் ஒரு இல ட்சத்து முப்பத்து எட்டாயிரம் கோடி இந்திய ரூபா அளவுக்கு, பாலுக்கான சந்தை மதிப்பு உள்ளது.

இருந்தாலும், வெறும் 50 ஆயிரம் கோடி ரூபா சந்தை மதிப்புள்ள சாராயத்தைக் குடிக்க வைத்துக் குடும்பப் பெண்களின் வாழ்க்கையைத் தமிழக அரசாங்கம் நாசமாக்குகிறது என அவர் ஆவேசமாகத் தெரிவித்தார். (க-8)

# சுத்துதே; பூமி சுத்துதே! வேக; வேகமாய் சுத்துதே!

(கொழும்பு)

பூமி வேகமாக சுழல்வதன் காரணமாக, வரலாற்றிலேயே மிகக் குறைந்த நேரம் கொண்ட நாளாக ஜூலை 9 ஆம் திகதி பதிவாகியிருக்கிறது. எதிர் வரும் நாட்களிலும் இது தொடரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக 86,400 வினாடிகள் அல்லது 24 மணி நேரங்களைக் கொண்டதாக ஒரு முழு நாள் அமையும். ஆனால், ஜூலை 9 ஆம் தேதி 1.3 முதல் 1.51 கண நேரம் (மில்லி செகண்ட்) குறைந்திருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமி வேகமாக சுழல்வதன் காரணமாக இது நேர்ந்திருக்கலாம் என்றும் வரும் வாரங்களிலும் பூமி வேகமாக சுழலலாம், அதனால், ஜூலை 22 மற்றும் ஆகஸ்ட் 5 ஆம் திகதிகளிலும் இதுபோன்ற நேரம் குறையலாம் என்றும் விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.


பூமியின் மையக் கருவில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் அல்லது பூமிக்கு மிக அருகே சந்திரன் வந்திருப்பது, பருவநிலை மாற்றம் போன்றவை, இதற்குக் காரணங்களாக அமையலாம் என்று, பூமியின் சுழலும் வேகம் அதிகரிப்பது நல்லதல்ல என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

பூமிக்கு மிக அருகே சந்திரன் வந்திருப்பது, பூமியின் சுழலும் அமைப்பில் லேசான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம், அதனால், பூமி சற்று வேகமாக சுழன்று, ஒரு நாளின் நேரம் குறைந்திருக்கலாம். நமது பூமி ஒரு முறை தன்னைத் தானே சுற்றிக் கொள்ள 24 மணி நேரங்கள் ஆகும்.

சூரியன், சந்திரன் போன்ற பல காரணிகள், பூமியின் சுழலும் தன்மையில் பூமியின் புவிஈர்ப்பு விசை காரணமாக மாற்றத்தை ஏற்படுத்தலாம். எனவே, பூமி சற்று வேகமாக சுழன்றிருக்கலாம் அல்லது மெதுவாக சுழன்றிருக்கலாம் இதனால், அந்த நாளில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

இது முன்னெப்போதும் நிகழாத அரிய நிகழ்வு என்றும், மிகப்பெரிய விடயம் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

அதுபோல, நிலவு தொலைவாகச் சென்றபிறகு பூமியின் சுழற்சி வேகம் குறையலாம், அப்போது, நீண்ட நேரம் கொண்ட நாளாக வரலாற்றில் பதிவாகலாம். உலகம் சுழல்வதை கணிக்கும் பணியானது 1970ஆம் ஆண்டு முதல் விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருகிறார்கள். இருப்பினும் 2020 ஆம் ஆண்டு முதல்தான், பூமி வேகமாக சுழல்வது பதிவாகி வருகிறது. (க-8)



9 ஆவது ஆண்டு நினைவலைகள்

அமரர் N.K முருகையா

அன்பே உருவான எங்கள்
குடும்ப குல விளக்கே
உங்கள் வதனமுகம் காணாது
தவிக்கிறோம் நாம்

மனைவி : ரத்தினம்
மகள் : வினோ
மகன் : கஜன்

அளவெட்டி. (4265)



கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில்
கடமையாற்றும் ஆசிரியர்
திரு.கணேசலிங்கம் ஜெயராஜா
அவர்களின்
அன்புத் தாயார்

அமரர். திருமதி
கணேசலிங்கம்
சிவகடாட்சம்

அவர்கள் 11.07.2025 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம். (ச-3363)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை.


# இராசிபலன்

12.07.2025
ஆனி 28, சனிக்கிழமை
துதியை பின்னிரவு 2.36 மணிவரை

உத்தராடம் முற்பகல் 8.01 மணிவரை
சுபநேரம் 2.59-4.29 மணிவரை
இராகுகாலம் 8.59-10.29 மணிவரை

சந்திராஷ்டமம்
புனர்பூசம்

வளவன்



மேஷம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.



ரிஷபம்

உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைச்சுமை கூடும்.



மிதுனம்

பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.



கடகம்

வழிபாடு சிறப்பினைத் தரும், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும்.



சிம்மம்

பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



கன்னி

பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.



துலாம்

வழிபாட்டில் ஆர்வம் கூடும், எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க உறவினர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



விருச்சிகம்

செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.



தனுசு

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, போசன சுகமுண்டு.



மகரம்

வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சயனசுகக் குறைவுண்டு.



கும்பம்

பணவரவால் சந்தோசமடைவீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.



மீனம்

பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

தனது திறமைகளை காலத்தில் பயன்படுத்திக்கொள்ளத் தெரிந்தவனே அறிவாளி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுதேச மருத்துவத்தை மக்கள் நாடிச் செல்வது வரவேற்கத்தக்கது

## ஆளுநர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**மக்கள் சுதேச மருத்துவத்தை ஆர்வத்துடன் தேடிச் செல்லும் போக்கு அதிகரித்து வருகின்றது. ஏனைய மருத்துவங்களால் பக்க விளைவுகள் ஏற்படுகின்றன என அவர்கள் நம்புவதன் காரணமாக சுதேச மருத்துவத்தை தேடிச் செல்கின்றனர். இந்த மாற்றத்தை சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**



கிளிநொச்சி மத்திய சித்த மருந்தகத்தின் புதிய கட்டடம் வடக்கு மாகாண ஆளுநரால் நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்துக்கு அருகில் திறந்து வைக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் திணைக்களங்களுக்கு சிறப்பான பௌதீக வளம் இருந்தால் மக்களுக்குத் தேவையான சேவையை வழங்க முடியும்.

எங்களுடைய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள மருத்துவமனைகளுக்கு மிகப் பெரிய கட்டடங்கள் மற்றும் நவீன உபகரணங்கள் கிடைக்கப்பெற்றன. ஆனால் மனித வளம் இல்லாமையால் அவை இயங்காமல் இருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் பௌதீக வளங்கள் இருந்தாலும் மக்களுக்கு தரமான - சிறப்பானதொரு சேவையை வழங்கினாலேயே அந்தத் திணைக்களங்களை நோக்கி மக்கள் வருவார்கள். மக்கள் எவ்வளவு விரும்பி திணைக்களங்களை நோக்கிச் செல்கின்றார்களோ அதில்தான் அந்தத் திணைக்களங்களின் வெற்றி தங்கியிருக்கின்றது.

திணைக்களங்களும் மக்களுக்குச் சிறப்பான சேவையை வழங்கினால் தான், அந்தத் திணைக்களங்களுக்கு மேலதிக உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற உந்துதல் ஏற்படும். எனவே மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்பதுடன், நகரின் மத்தியில் திறக்கப்பட்டமையால் சித்த மருந்தகத்தை நோக்கி மக்கள் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்பதையும் நினைவிலிருத்தி செயற்பட வேண்டும் என்றார். (க-8)

# சட்டவிரோத மணல் கடத்தல் ஒருவர் கைது

(கரணவாய்)

சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டிருந்த டிப்பர் வாகனம் ஒன்றை பருத்தித்துறை பொலிஸார் ஆணி விரிப்பு மூலம் வழிமறித்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கைப்பற்றியதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வடமராட்சி வல்லிபுரம் பகுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிய நிலையில் வேகமாக வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனத்தை பருத்தித்துறை பொலிஸார் மந்திகைப் பகுதியில் வைத்து நிறுத்துமாறு சைகை காட்டினர்.

ஆனாலும் தப்பித்துச் சென்று முதலாம் கட்டை வழியாக தம்பசிட்டி வீதி ஊடாக சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனத்தை முள் மிதி போட்டு தடுத்து நிறுத்தினர்.

இதில் பின் ரயர் காற்றுப் போன நிலையில் சிலர் தப்பிச் சென்ற நிலையில் வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (8-60)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு பிரதேச வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு கட்டடத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# விளையாடி மகிழ்வோம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கலைவாணி முன்பள்ளியின் "விளையாடி மகிழ்வோம்" நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் சி.இளங்கோ தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தவிசாளர் தி.நிரோசன், சிறப்பு விருந்தினர்களாக யா/ஊரேழு கணேச வித்தியாலய அதிபர் இரா. ஜெயக்குமார் மற்றும் பிரசாத் நகையகத்தின் உரிமையாளர் ச.உதயகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஜெ/267 கிராம உத்தியோகத்தர் ம.ஞானேந்திரன், கோப்பாய் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் செல்வி.ப. நாகேஸ்வரி, ஹரி ஏயார் ஏவல்ஸ் பிறைவெற் லிமிடெட் நிறுவன முகாமையாளர் மதுஷன் மற்றும் ஊரெழு குடும்பத் தலைவி திருமதி ச.மிரிகா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (3)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு கேணியம்பதி ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக எண்ணெய்க் காப்பு சாத்தும் அடியார்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்த முடியும் என அறிவித்துள்ளார். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 | 350 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 450 | 350 | 400 |
| தக்காளி | 180 | 250 | 250 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 300 | 250 |
| கோவா | 300 | 400 | 450 | 300 | 400 |
| கரட் | 400 | 500 | 450 | 370 | 400 |
| பூசணி | 120 | 150 | 150 | 120 | 150 |
| புடோல் | 100 | 150 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 500 | 600 | 700 | 600 | 600 |
| வெண்டைக்காய் | 200 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 200 | 300 | 300 | 250 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 200 | 350 | 240 | 250 |
| கறிமிளகாய் | 600 | 600 | 700 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 700 | 420 | 500 |
| போஞ்சி | 400 | 450 | 600 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 350 | -- | 300 |
| கீரை – 1 பிடி | 80 | 60-120 | 100 | 50 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 150 | 150 | 80-150 | 120-150 |
| இராசவள்ளி | 600 | 650 | 600 | 580 | 600 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 80 | -- | 250 |

# பொதுமக்களின் காணிகளை உடன் விடுவியுங்கள் அரசை வலியுறுத்திய மனித உரிமைகள் ஆணையாளர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது தொடர்பிலும், இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது இலங்கை விஜயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயமும் சேர்க்கப்பட்டுள்ளதாக உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துரைத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் உறுப்பினரான ஜேர்மி லோரன்ஸ் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், தமது இலங்கை விஜயத்தின் போது வடக்கு கிழக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தியதாக ஜேர்மி லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த போது கைப்பற்றப்பட்ட காணிகளில் 91 சதவீதமான காணிகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி குறித்த ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரா கணிதப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு லண்டனில் கௌரவிப்பு

(கரணவாய்)


வல்வை சிதம்பரா கணிதப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை லண்டனில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கையிலிருந்து வெற்றியீட்டிய நான்கு மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

அந்த வகையில் அளவெட்டி அருநோதயாக் கல்லூரி மாணவன் ரா.ஆருஜன். வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் ம.ஜஸ்வித். கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் லி.தஸ்வின் மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் ச.கீதன் ஆகிய நான்கு மாணவர்களும் நேரில் பங்கேற்று விருதுகளை பெற்றுக்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-3-60)


ரா.ஆருஜன்


லி.தஸ்வின்


ம.ஜஸ்வித்


ச.கீதன்

# புதுக்குடியிருப்பில் உயிரிழந்த வர்த்தகர்களுக்கு நினைவேந்தல்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு. புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் உயிரிழந்த வர்த்தகர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வொன்று நேற்றுக் காலை நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு வர்த்தக சங்க தலைவர் த.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வர்த்தகர்களின் குடும்பத்தினர்கள். வர்த்தகர்கள். சமூக செயற்பாட்டாளர்கள். பொதுமக்கள். முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். (8-299)

# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(கண்டாவளை)

அமரர் குருபரன் ஆரிஸ் ஞாபகார்த்தமாக அவர்களின் பெற்றோரினால் கற்றல் மற்றும் வாழ்வாதார உதவிகள் கடந்த திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பெண்கள் பிரிவின் ஒழுங்கமைப்பில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

கிளி.ஆனையிறவு கண்ணகை அம்மன் வித்தியாலய 13 மாணவர்களுக்கு தலா 5,700.00ரூபா கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் இருவருக்கு 18,162.00 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளும், ஒருவருக்கு 8,000.00ரூபா ஜோக்கட் தயாரிக்கும் இன்குபேற்றருக்கான காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரும் பதில் திட்டமிடல் பணிப்பாளருமான எஸ்.மோகனபவன். மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் உதயனி, சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (8-315)

# கிளிநொச்சி மத்திய சித்த மருந்தகத்தின் புதிய கட்டடம் திறப்பு



கிளிநொச்சி மத்திய பேரூந்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள மத்திய சித்த மருந்தகத்தின் புதிய கட்டடமானது மக்கள் சேவைக்காக நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் Dr.தி.சர்வானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு குறித்த மத்திய சித்த மருத்தகத்தின் புதிய கட்டடத்தை மக்கள் சேவைக்காக உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தார்.

இந்த புதிய கட்டடமானது 55.52 மில்லியன் ரூபாய் செலவீட்டில் அமைக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை காலமும் குறித்த வைத்தியசாலை கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலக வளாகத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (8-315-316)





கிளிநொச்சி கோணாவில் பகுதியில் நாற்று நடும் இயந்திரம் மூலம் AT362 நெல் வர்க்கம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயலில் நெல் அறுவடை விழா நேற்றுக் காலை 9 மணிக்கு நடைபெற்றது. (படங்கள்:தே[illegible])

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை :- மல்லாகம் உப அலுவலகம்
உரிமையாளர் பெயர் :- இராஜேந்திரன் இராஜதுரையும் பெண் ஜெயராணியும்
விண்ணப்பதாரர் பெயர் :- திருமதி ஜெயராணி இராஜதுரை
முகவரி :- சாத்தாகலட்டி, அளவெட்டி வடக்கு. அளவெட்டி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 12. சாத்தாகலட்டி வீதி ஆதன இல. 31/52 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று. அளவெட்டி இறை "கலப்பனாவுடை" என்ற ஆதனம் உரிமைகோருபவர் சொந்தக்காரர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது. குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 22.09.2018 ஆம் திகதியில் 5463 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அளவெட்டி இறை "கலப்பனாவுடை" நிலப்பரப்பு ஐந்து. குளி பன்னிரண்டு (நில.பர. 5 குளி 12) விஸ்தீரணம் உள்ள ஆதனம் விண்ணப்பதாரரான இராஜேந்திரன் இராஜதுரையும் பெண் ஜெயராணிக்கும் சொந்தமாகியது.

5463 ஆம் இலக்க உறுதியின் தாய்உறுதியாக பிரசித்த நொத்தாரிசு பொ. சுந்தரலிங்கம் முகதாவில் 2018.05.13 ஆம் திகதி 5387 ஆம். 5388 ஆம் இலக்க நன்கொடை உறுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் பிரசித்த நொத்தாரிசு காயத்திரி அகிலன் முகதாவில் 29.08.2020ஆந் திகதிய 1590ஆம் இலக்க உறுதி இராதா கிருஷ்ணன் சதீப் முதலாம் பகுதியாகவும் இராஜேந்திரன் இராசஜதுரையும் பெண் ஜெயராணி இரண்டாம் பகுதியாகவும் சேர்ந்து எழுதிய திருத்தல் உறுதியும் ஆதன வரிப் பெயர்மாற்ற விண்ணப்பத்துடன் சமர்ப்பித்துள்ளார். 1590ஆம் இலக்க உறுதியில் 26.01.1983ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு செ.புண்ணியமூர்த்தி முகதாவில் 1912ஆம் இலக்கத்தில் முடிந்த சீதன உறுதியால் இராதாகிருஷ்ணன் சதீப்பின் தாயான சுதந்திரச்செல்விக்கு செல்லர் சின்னத்துரையும் பெண் சின்னப்பிள்ளையும் சீதனம் அளித்திருந்தார். குறித்த சீதன உறுதி மூலம் இரண்டு ஆதனங்கள் சீதனமளிக்கப்பட்ட போதும் 1ஆம் ஆதனத்திற்கான உரித்து வரலாறு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 2ஆவதாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் தொடர்பில் எந்தவிதமான உரித்து வரலாற்றையும் குறிப்பிடாததால் இந்த திருத்தல் உறுதியை முடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 2ஆம் ஆதனம் 24.02.1952ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இ.காசிநாதர் முகதாவில் 681ஆம் இலக்கத்தில் செல்லர் சின்னத்துரையும் பெண் சின்னப்பிள்ளைக்கும் அறுதியாக வந்தடைந்த ஆதனமாகும். இவ் ஆதனத்தை சுதந்திரச்செல்வி 13.05.2018 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு பொ. சுந்தரலிங்கம் முகதாவில் 5388ஆம் இலக்க உறுதியால் அவரது மகனான இராதாகிருஷ்ணன் சதீப்பிற்கு நன்கொடையளித்திருந்தார். அவர் இவ் ஆதனத்தினை 22.09.2018ஆம் திகதியிட்டு 5463ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதி மூலம் விண்ணப்பதாரியான இராஜேந்திரன் இராஜதுரையும் பெண் ஜெயராணிக்கும் வந்தடைந்துள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்குப் பிரதேசசபை, தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு. மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவு J/216. அளவெட்டி இறை "கலப்பனாவுடை" நிலப்பரப்பு ஐந்து குளி பன்னிரண்டும் உம் (நில.பர. 05 குளி 12) இதன் வடக்கெல்லையில் இருக்கும் பன்னிரண்டடி அகலமான பாதையூடாக கிழக்கே இருக்கும் ஒழுங்கைக்குப் போக்குவரத்து செய்யும் உரித்தும். இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் A.அருள்நேசன் 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி 1513G இலக்கத்தில் வரைந்த படத்தில் துண்டு 1(Lot1) எனச் சுட்டப்பட்டுள்ளது.

இதற்கு எல்லைகள்
கிழக்கு - பூபாலசிங்கத்துக்கும் பெண் தேவகிக்குமுரிய ஆதனம்
வடக்கு - 12 அடி அகலமான பாதையும் மகேந்திரன் பெண் நந்தினியின் ஆதனமும்.
மேற்கு - ஐயனார் கோவில் ஆதனம்.
தெற்கு - அப்புத்துரை சந்திரதேவனின் ஆதனம்
இவ்வெல்லைப்படி இது முழுவதும் இதற்குரியவைகளும்

மேற்குறித்த ஆதனத்தை இராஜேந்திரன் இராஜதுரையும் பெண் ஜெயராணி என்னும் பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் இராஜேந்திரன் இராஜதுரையும் பெண் ஜெயராணி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** (4771)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### நாசாவின் பணியாளர்களை பணிநீக்கம் செய்யும் ட்ரம்ப்




(வோஷிங்டன்)

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் நாசா விண்வெளி நிறுவனத்தில் உயர் பொறுப்பில் உள்ள இரண்டாயிரம் ஊழியர்களை பணிநீக்கம் செய்ய ட்ரம்ப் அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அமெரிக்க பொருட்களுக்கு வரிவிதிக்கும் நாடுகளுக்கு கடுமையான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்.

இதற்கிடையில், செலவினங்களைக் குறைக்கும் நோக்கில் அமெரிக்காவின் விண்வெளி மையமான நாசாவில் பணியாளர்கள் உயர்பொறுப்பு ஊழியர்கள் இரண்டாயிரம் பேரை பணிநீக்கம் செய்ய ட்ரம்ப் அரசு முடிவெடுத்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்திருக்கின்றன. (சு-8)

### சரக்குக் கப்பலைத் தாக்கிய ஹவுதி 4 பேர் பலி 11 பேர் மாயம்



(வோஷிங்டன்)

செங்கடலில் கிரேக்க கப்பல் மீது ஹவுதி படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். கப்பல் தண்ணீரில் மூழ்கியதில் நான்கு பேர் உயிரிழந்தனர். மேலும் மாயமான 11 பேரை தேடும் பணி தொடர்கிறது.

செங்கடலில் சரக்கு கப்பல் மீது ஹவுதி படையினர் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவர்கள் கப்பல் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியும், கையேறி குண்டுகளை வீசியும், சிறிய ரக ராக்கெட்டுகளை ஏவியும் தாக்குதல் நடத்துகின்றனர்.

ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக ஏமனின் ஹவுதி படை செயற்படுகிறது. இதனால், இஸ்ரேல்- ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து. செங்கடலில் அதிக தாக்குதலை ஹவுதிப் படையினர் நிகழ்த்தி வருகின்றனர்.

இந்நிலையில், செங்கடலில் கிரேக்க கப்பல் மீது ஹவுதி படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். கப்பல் தண்ணீரில் மூழ்கியதில் நான்கு பேர் உயிரிழந்தனர். மேலும் மாயமான 11 பேரை தேடும் பணி நடக்கிறது. தண்ணீரில் தத்தளித்த 10 பேரை இதுவரை மீட்பு படையினர் மீட்டுள்ளனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் தொடங்கியதற்கு பிறகு, செங்கடலில் நூற்றுக்கு மேற்பட்ட சரக்கு கப்பல்கள் மீது ஹவுதி படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சு-8)

# இராஜதந்திரம் தோற்றாலும் இ...
# ஆயுதங்களைக் கீ...
# அமைதி வழிக்கு...
# ஹமாசை எச்சரிக்... இஸ்ரேல்

**(ஜெருசலேம்)** அறுபது நாள் போர் நிறுத்தத்தை மீறினால் ஹமாஸ் பாரிய அழிவுகளைச் சந்திக்கும் காசா மீது உக்கிர தாக்குதலை மேற்கொண்டு ஹமாசை முற்றிலுமாக அழிக்கும் பலம் எம்மிடம் உண்டு என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இறுமாப்பாய்த் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே நீண்ட நாட்களாக போர் நடந்து வரும் நிலையில், ஹமாஸ் உடனான போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இஸ்ரேலின் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட 60 நாள் போர் நிறுத்தத்தின் கீழ் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றால், காசாவில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்க இஸ்ரேல் தயாராக இருப்பதாக பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

இது குறித்து, அமெரிக்காவிலிருந்து அவர் வெளியிட்டுள்ள காணொளியில் கூறியதாவது: ஈரானுக்கு எதிரான போரில் வரலாற்று வெற்றிக்குப் பிறகு, அமெரிக்காவிற்கு வரலாற்று சிறப்புமிக்க வருகை. மீதமுள்ள பிணைக் கைதிகளை மீட்டெடுக்கவும், ஹமாஸின் இராணுவ கட்டமைப்பை அகற்றவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

தற்போது 60 நாள் தற்காலிக போர்நிறுத்தத்திற்கு ஈடாக, உயிருடன் உள்ள பிணைக் கைதிகளை விடுவிக்கவும், இறந்த பிணைக்கைதிகளின் உடலை ஒப்படைக்கவும் நாங்கள் முயற்சிக்கிறோம்.

இந்த போர் நிறுத்தத்தின் தொடக்கத்தில், போருக்கு நிரந்தர முடிவு கட்டுவது குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடு...

### விமானப் பயிற்சியில் விபரீதம்
### அநியாயமாய்ப் பறிபோன இரு உயிர்கள்

(ஒட்டாவா)


விமானப் பயிற்சியின் போது இரு விமானங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இந்திய மாணவன் உட்பட 2 பேர் உயிரிழந்தனர்.

கனடா நாட்டின் மனிரோபாவில் உள்ள ஸ்டெயின்பாக் பகுதியில் விமானம் ஓட்டும் பயிற்சி மையம் செயற்பட்டு வருகிறது. இந்தியர் ஒருவரும் கனடா வைச் சேர்ந்தவரும் பயிற்சி பெற்றுவந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## இராணுவ பலம் தோற்காது
## கீழே போட்டுவிட்டு
## கு வாருங்கள்
## க்கும்



வோம். ஆனால், ஹமாஸ் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு முழுமையாக இராணுவமய மாக்கல் உட்பட, இஸ்ரேலின் குறைந்தபட்ச நிபந்தனைகளின் கீழ் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

போர்நிறுத்தத்தின் கீழ் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றால், காசாவில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்க இஸ்ரேல் தயாராக இருக்கிறது இம்முறை எமது இராணுவத்தின் முழு பலத்தையும் காட்டுவோம்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் நாம் மிகப் பெரிய சாதனைகளைப் பெற்றுள்ளோம். இராஜதந்திரம் வேலை செய்யவில்லை என்றால் இராணுவ பலத்தின் மூலம் செயற்பட விரும்புகிறோம்.

காசாவிற்கு அவசரமாகத் தேவையான உணவு மற்றும் எரிபொருளை அனுமதிக்க இஸ்ரேலுடன் ஐரோப்பிய அதிகாரிகள் ஒரு புதிய ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளனர் என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் அறிவித்தார்.

இதற்கிடையே, மத்திய காசாவில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு வெளியே மருத்துவ உதவிக்காகக் காத்திருந்த 10 குழந்தைகளும், ஐந்து பெரியவர்களும் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

## ஊட்டச்சத்து மருந்துக்காய் காத்திருந்த அப்பாவிகளின் உயிரை எடுத்த இஸ்ரேல்



(ஜெருசலேம்)

காசாவில் உள்ள மருத்துவமனை ஒன்றின் முன் ஊட்டச்சத்து மருந்துகளுக்காக வரிசையில் நின்றவர்கள் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் எட்டு குழந்தைகள் மற்றும் இரண்டு பெண்கள் உட்பட குறைந்தது 15 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த மருத்துவமனையை நடத்தும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட உதவி குழுவான ப்ராஜெக்ட் ஹோப், இந்தத் தாக்குதல் சர்வதேச சட்டத்தின் அப்பட்டமான மீறல் எனக் கூறியுள்ளது.

ஊட்டச்சத்தின்மை தொற்றுநோய் உட்பட பல நோய்களிற்கான மருந்துகளை பெறுவதற்காக மருத்துவநிலையம் திறப்பதற்காக காத்திருந்த மக்கள் மீதே இஸ்ரேல் தாக்குதலை மேற் கொண்டது என புரொ ஜெக்ட் ஹோப் அமைப்பு தெரிவித்துள்ளது.

திடீரென ஆளில்லா விமானங்களின் சத்தத்தை கேட்டோம் அடுத்த கணமே தாக்குதல் நடத்தப்பட்டது என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து இஸ்ரேல் பொதுமக்கள் மீது இவ்வாறான வெறித்தனமாக தாக்குதலை மேற்கொள்வதை நிறுத்த வேண்டும் என அவ் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (க-8)

## பேருந்தில் சென்றவர்களை பலியெடுத்த பயங்கரவாதிகள்

### பாகிஸ்தானில் துயரம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் குவெட்டாவில் இருந்து லாகூர் சென்று கொண்டிருந்த பேருந்தில் துப்பாக்கியுடன் ஏறிய கிளர்ச்சியாளர்கள் குழு, அதில் இருந்த பயணிகள் 9 பேரை கொடூரமான முறையில் சுட்டுக்கொன்றனர்.

எவ்வாறாயினும் இந்த கொடூரச் சம்பவத்திற்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை.

பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த மக்களையும், பலுசிஸ்தானில் வெவ்வேறு நெடுஞ்சாலைகளில் செல்லும் பயணிகள் பேருந்துகளையும் கிளர்ச்சியாளர்கள் குறிவைப்பது இது முதல் முறையல்ல.

இந்தத் தாக்குதலுக்கு எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை. ஆனால் கடந்த காலங்களில், பஞ்சாப் மக்களுக்கு எதிராக இன பலூச் கிளர்ச்சியாளர்கள் குழுக்கள் இது போன்ற இலக்கு தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-8)



இருவரும் தனித் தனியாக விமானத்தை இயக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, வின்னிபெக்கில் இருந்து 60 கி.மீ தொலைவில் தெற்கு விமான நிலையம் அருகே விமானத்தை தரையிறக்க முயன்றனர்.

அப்போது எதிர்பாராத விதமாக 400 மீற்றர் உயரத்தில் இருவரின் விமானங்களும் மோதி விபத்தில் சிக்கியது.

உடனே தீயும் பற்றிக் கொண்டது. இவ்விபத்தில் இரண்டு பயிற்சி மாணவர்களும் சம்பவ இடத்திலேயே பலியாகினர். (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்தமில்லாத விமான நிலையத்தால் நாடு கடன் சுமையில் தவிக்கிறது

## மத்தள விமான நிலையம் குறித்து பிமல்



(கொழும்பு)

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் வணிக நோக்கமின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்று விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களிடம் உரையாற்றிய அவர், இது கைவிடப்பட்ட விமான நிலையமாக மாறிவிட்டது, இதனால் நாடு பெரும் கடனை எதிர்கொள்கிறது.

குறிப்பாக இலங்கை தற்போது 2030 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய 260 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை எதிர்கொள்கிறது.

இதனிடையே, மத்தள விமான நிலையத்தை விமானங்கள் தரையிறங்கி புறப்படும் ஒரு செயற்பாட்டு நிறுவனமாக மேம்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது.

இது ஒன்று, இரண்டு ஆண்டுகளில் நடக்கக்கூடிய ஒன்றல்ல.

இந்த விமான நிலையம் ஒரு முக்கிய விமான நிலையமாக இல்லாவிட்டாலும், மாற்று விமான நிலையமாக இதைப் பயன்படுத்தலாம்.

விமான பராமரிப்பு போன்ற பிற செயற்பாடுகளுக்கு இந்த விமான நிலையத்தைப் பயன்படுத்தவும், பிரதான விமான நிலைய வளாகத்திற்கு வெளியே உள்ள நிலத்தை சூரிய மின்சக்தி திட்டங்களுக்குப் பயன்படுத்தவும் பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1984- இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>12இல்செவ்<br>உயரம்: 5'6"<br>கி-பா- 52<br>தகைமை/தொழில்: Hotel management, London<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/12493 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Bsc, Teacher<br>எதிர்பார்ப்பு:அரச வேலை,<br>வெளிநாடு-(லண்டன் கனடா)<br>தொ.இ: G/13037 |
| பிறப்பு:1988-இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>8இல்செவ்<br>கி-பா-87 1/2<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில்-O/L, Peon<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15780 | பிறப்பு-1991 - இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 37<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor.<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer, Lawyer<br>தொ.இ: G/15014 |
| பிறப்பு:1986-இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>12இல்செவ்<br>கி-பா-28 3/4<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:O/L, Business (Own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15781 | பிறப்பு-1991-இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 45 1/4<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: BA,DO(Gov)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11011 |
| பிறப்பு: 1994- இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி-பா- 60<br>7இல் செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் - O/L, Driver<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15782 | பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கிபா-9 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15249 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி-பா- 18 1/2<br>உயரம்:6"<br>தகைமை/தொழில்: BSc.ஜேர்மனி<br>எதிர்பார்ப்பு: PRஉள்ளவர்(வெளிநாடு)<br>தொ.இ: B/15783 | பிறப்பு -1998 - RC<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:BSc, Demostrator<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (கனடா, லண்டன், சுவிஸ்,ஜேர்மனி)<br>தொ.இ: G/15251 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 412



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## தற்பெருமை!

மனிதனுக்கு உடம்பும் வலுவாக இருக்க வேண்டும். அதே நேரத்திலே அறிவும் வலுவா க இருக்க வேண்டும்.

தினமும் நாம் ஏகப்பட்ட மனிதர்களைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். அதிலே சில பேருக்கு உடம்பு பலம் மட்டும் அதிகமாக இருக்கும். சிலபேருக்கு அறிவு பலம் மட்டும் அதிகமாக இருக்கும்.

ஆனால் அதே சமயத்திலே அவர்களுக்கு இன்னொரு பலவீனமும் இருக்கும் அதாவ து தற்பெருமை.

தான் ரொம்ப பலசாலி அப்படி என்கின்ற நினைப்பு அவர்களுக்கு இருந்து கொண்டே தான் இருக்கும்.

பலம் இருந்தும் பல சந்தர்ப்பங்களிலே அவர்கள் தோற்றுப் போவதற்குக் காரணம் இந்தப் பலவீனம்தான்!

சீனா தேசத்திலே ஒரு பெரியவர் இருந்தார்.

"எஃப்பெண்டி" என்று பெயர். பெரிய அறிஞர். ஒருநாள் அவரைத் தேடிக்கொண்டு ஒருவன் வந்தான். வந்தவன் உடம்பாலே பலசாலி. அவன் இவரைப் பார்த்துச் சொன்னான்.

ஐயா.. நான் ரொம்பவும் பலசாலி! அதாவ து நான் உடம்பாலே பலசாலி.. நீங்கள் அறிவாலே பலசாலி! நாம் இரண்டு பேரும் சேர்ந்து இருந்தால் நல்லது!

நாம் நண்பர்களாக இருப்போமே!" என்றான்.

அந்தப் பெரியவர் இவனைக் கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தார். அப்புறம் கேட்டார்:

"சரிப்பா நீ எந்த வகையிலே பலசாலி?" என்று கேட்டார்.

உடனே அவன் தன்னைப்பற்றி சொல்ல ஆரம்பித்தான்.

"ஒரு பெரிய பாறாங்கல்லை அப்படியே அலாக்காகத் தூக்கி என்னாலே எறிய முடியும். நம் ஊர் எல்லைக்கு வெளியே நின்று கல்லைத் தூக்கி எறிந்தேன் என்றால்அது நம் நகரத்து சுவரைத் தாண்டிப் போய் உள்ளே விழுந்துவிடும். அவ்வளவு வேகமாக கல்லை வீச என்னாலே முடியும்!" என்றான். பெரியவர் பார்த்தார்.

"சரி - வா ஒரு சோதனை செய்து பார்ப்போம்". என்று சொல்லி அவனை அழைத்துக் கொண்டுப் போனார்.

இரண்டு பேருமாக சேர்ந்து அந்த நகரத்தின் மைதானப் பகுதிக்கு வந்தார்கள். அந்தப் பெரியவர். தன்னுடைய சட்டைப்பையிலே இருந்து ஒரு சின்ன பட்டுக் கைக்குட்டையை எடுத்தார். அவனிடம் கொடுத்தார்.

"இந்தாப்பா. நீ ரொம்ப பலசாலி என்கிறாயே.

இந்தச் சின்ன துணியை சுவருக்கு அப்பாலே போய் விழுகிற மாதிரி உன்னாலே வீசி எறிய முடியுமா?" என்றார். "என்ன இது? ஒரு பெரிய பாறாங்கல்லையே தூக்கி எறியிறவன் நான். இந்தச் சின்னத் துணியையா என்னாலே தூக்கி எறிய முடியாது? கொடுங்கள் இப்படி!" என்று அதை வாங்கினான்.

பலம் கொண்டு மட்டும் வேகமாக வீசி எறிந்தான்.

கனம் இல்லாத அந்தக் கைக்குட்டை சுவரைத் தாண்டிப் போகவில்லை. கொஞ்சதூரம் மேலே போய் திரும்பவும் வந்து தரையிலேயே விழுந்தது! பெரியவர் சிரித்தார்.

"என்ன நண்பா! முடியலையா?" என்றார். அவன் பேசாமல் நின்றுகொண்டிருந்தான்! " என்னாலே முடியும்!" என்றார் பெரியவர்.

அவன் ஆச்சரியமாக இவரைப் பார்த்தான்.

பெரியவர் அந்தக் கைக்குட்டையை எடுத்தார். ஒரு சின்ன கல்லை அந்தத் துணிக்குள்ளே வைத்தார். கல் தெரியாத அளவுக்கு துணியாலே மூடி சுருட்டிப் பிடித்தார். இப்போது அந்தக் கல்லோடு சேர்த்து அந்தக் கைக்குட்டையை வேகமாக வீசி எறிந்தார். இப்போது அந்தத் துணியும் கல்லோடு சேர்ந்து சுவருக்கு அப்பாலே போய் விழுந்தது.

இப்பதான் அவனுக்குப் புரிந்தது. உடல் பலத்தைவிட அறிவு பலம் பெரிது என்பது.

அவன் தன்னுடைய தோல்வியை ஒப்புக்கொண்டான்.

உடல் பலமும் அறிவு பலமும் சேர்ந்து இருந்துவிட்டால். அது சில சமயம் ஆபத்தாகக் கூட போய்விடும்.

சிங்கத்துக்கு உடல் பலம் அதிகம். அதனிடம் அறிவு பலமும் அதிகமாக இருந்துவிட்டா ல் என்ன ஆகும் தெரியுமா? இந்தக் கதையைக் கேளுங்கள். ஒரு ஆசாமி காட்டு வழியாக போய்க்கொண்டிருந்தான்.

திடீர் என்று ஒரு சிங்கம் எதிரிலே வந்து விட்டது. இந்த ஆளுக்கு ஒன்றும் புரியவில்லை!

உடனே அந்த இடத்திலேயே உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டு கடவுளை வேண்ட ஆரம்பித்துவிட்டான்.

இதைப்பார்த்துவிட்டு அந்த சிங்கமும் அவனுக்குப் பக்கத்திலேயே வந்து உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டிருந்தது.

அந்த ஆசாமி இதைப் பார்த்தான். சிங்கத்திடம் சொன்னான். "அருமை சகோதரனே! உன்னைப் பார்த்ததும் எங்கே என் உயிர் போய் விடுமோ என்று பயந்தேன்.

நல்ல வேளை நீயும் என்னோடு சேர்ந்து கடவுளை நினைக்க ஆரம்பித்துவிட்டாய்! இப்படி உன்னைப் பாரப்பதற்கு என்க்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?" என்றான். உடனே அந்த சிங்கம் இவனைப் பார்த்து. "பேசாமல் இரு,சத்தம் போடாதே... உன்னை எனக்கு இரையாகச் சாப்பிடக் கொடுத்த அந்த இறைவனுக்கு இப்போது நான் கண்ணை மூடி நன்றி சொல்லிக்கொண்டிருக்கேன்!" என்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்நடை வளர்ப்பு - பகுதி 05

# பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் லம்பி தோல் நோய்



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

**லம்பி தோல் நோய் [ lumby skin disease] என்றால் என்ன?**

பசு மற்றும் எருமை மாடுகளில் ஏற்படுள்ள ஒருவகை தோல் நோயாகும். மாடுகளுக்கு ஏற்படும் பெரியம்மை நோய் என்றும் சொல்லலாம். உடல் முழுதும் கட்டிகளை/ கொப்பளங்களை ஏற்படுத்தும் இந்த நோய் மிக விரைவாக பரவலடையும். இந்த நோய் பெரிய கால்நடைகளில் மிகக் குறைந்தளவு இறப்பு வீதத்தை ஏற்படுத்தும் அதே வேளை இளம் கன்றுகளில் அதிக உயிரிழப்பை ஏற்படுத்துகிறது.

**நோய்க்குரிய காரணி என்ன ?**

இந்த நோய் Poxviridae குடும்பத்தையும் Capripoxvirus பிரிவையும் சேர்ந்த lumpy skin disease virus (LSDV) எனும் வைரஸால் ஏற்படுகிறது. இந்த வைரஸ் அடங்கும் பிரிவில் ஆட்டு அம்மை மற்றும் செம்மறி ஆட்டு அம்மை ஆகிய நோய்கள் உள்ளன.

**எந்தெந்த கால்நடைகளுக்கு ஏற்படும்?**

இந்த நோய் அதிகளவு பசு மாடுகளுக்கும் மிக குறைந்தளவு எருமை மாடுகளுக்கும் ஏற்படுகிறது. ஆடு, பன்றி, ஏனைய செல்ல பிராணிகள் போன்ற ஏனைய உயிரினங்களுக்கு இந்த நோய் ஏற்படாது.

**இந்த நோய் எப்படி பரவலடைகிறது?**

பெரும்பாலும் நுளம்புகள், உண்ணிகள் மற்றும் மாட்டு ஈ போன்ற இரத்தம் உறிஞ்சும் பூச்சிகளால் பரவலடைகிறது. நோயுற்ற மாடுகளின் சளி, உமிழ்நீர், விந்து, இரத்தம், காயங்களின் திரவங்களின் தொடுகையால் மிக குறைவாக பரவலடைகிறது. தாயிலிருந்து கன்றுக்கு கருப்பை மூலமும் பாலின் மூலமும் ஏற்படுகிறது. எனினும் அதிகமாக மேற்கூறிய காவிகளான பூச்சிகள் கடிப்பதால்தான் அதிகளவு ஏற்படுகிறது. சில வேளைகளில் மாடுகளுக்கு ஊசி போடும் போது ஒரே ஊசி பல மாடுகளுக்கு பாவிக்கப்பட்டாலும் பரவலடைகிறது.


**நோய் வந்த மாட்டின் பாலை அருந்தலாமா? இறைச்சியை உண்ணலாமா?**

இந்த வைரஸ் 55 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் இரண்டு மணி நேரமும் 65 பாகை செல்சியசில் / 30 நிமிடம் கொதிக்க வைத்தாலும் அழிவடையக் கூடியது என்பதால் பெரிதாக பயப்படத் தேவையில்லை. இது வரை மனிதனுக்கோ மாடுகள் தவிர்ந்த ஏனைய பிராணிகளுக்கோ இந்த நோய் வந்ததில்லை. சில வேளைகளில் நோயுற்ற மாடுகளை பார்க்கும் ஒருவருக்கு பாலை அருந்துவதோ, இறைச்சியை உண்ணவோ அருவருப்பு ஏற்படலாம்.

மேலும் நோய் வந்த மாடுகளுக்கு நுண்ணுயிர் கொல்லி ஐ [Antibiotic] சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதா என பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த வகையான நுண்ணுயிர் கொல்லிகள் குறித்த நாள் வரை மாடுகளின் பாலில், இறைச்சியில் இருக்கும். இது மனித சுகாதாரத்தை பாதிக்கும். [நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு நிலையை ஏற்படுத்தலாம் - Antibiotic Resistant]

**இந்த நோய் முதன்முதலில் எங்கு ஏற்பட்டது?**

1929 ஆண்டில் தென் ஆபிரிக்க நாடான சம்பியாவில் முதன் முதலில் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்காவின் பல நாடுகளிலும் இந்த நோய் தொடர்பான பதிவுகள் உள்ளன. இந்த நோய் இலங்கையில் முதன் முதலில் 2020 ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் சில பகுதிகளில் அவதானிக்கப்பட்டு பின்னர் நாடு முழுதும் பரவியிருந்தது. இன்று வரை அடிக்கடி இந்த நோயின் தாக்கம் அவதானிக்கப்படுகிறது.



**நோய் அறிகுறிகள் என்ன ?**

கண்ணில் நீர் வடியும். நாட்செல்ல கண் குருடாகலாம். காய்ச்சல் காணப்படும். 41-42 பாகை செல்சியஸ் மூக்கில் இருந்து சளி வடியும். வாயிலிருந்து அதிக எச்சில் வரும். உணவு உட்கொள்ளாது. உடல் மெலியும். உடலில் சகல இடங்களிலும் 0.5 - 5cm அளவான கொப்புளங்கள் தோன்றும்.

பல மாடுகளில் நிணநீர் கணுக்கள் வீக்கமடையும். கழுத்து, கால், பாதம் , தொடை, முகம், அடிவயிறு, நெஞ்சு, பிறப்புறுப்பு, மடி முலைகாம்பு பகுதிகளில் பெரிய வீக்கங்கள் தோன்றும். காலில் ஏற்படும் வீக்கம் காரணமாக மாடுகள் நொண்டும். நடக்க சிரமப்படும்.

சில கட்டிகள் உடைந்து சீழ் வரும். கவனிக்காத காயங்களில் புழுத் தொற்றும் ஏற்படும். காயங்கள் நெருப்பு சுட்ட காயம் போல் காணப்படும். முதன் முதலில் நோய் ஏற்பட்ட பின் 4-14 நாட்களில் நோய் அறிகுறிகள் காட்டத் தொடங்கும். பெரும்பாலான மாடுகளில் இந்த நோய் இரண்டு மூன்று வாரங்களில் முற்றிலும் சுகமாகிவிடும். காயம் ஏற்பட்ட மாடுகளின் தோலில் தழும்பு இருக்கும்.

கன்றுகளில் அதிக சளி ஏற்பட்டு சில நாட்களில் மூச்சு விடச் சிரமப்பட்டு இறக்கலாம். மூக்கு துவாரத்தை சூழவுள்ள பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டு புழுக்கள் தோன்றலாம்.

**இந்த எப்படி கண்டுபிடிப்பது?**

நோய் அறிகுறிகளை வைத்து இலகுவாக அறியலாம். [Clinical signs] இலத்திரன் நுணுக்கு காட்டி மூலம் அவதானிக்கும் போது வைரஸ் தெளிவாக தெரியும். வைரஸ் தனிமைப்படுத்தல் பரிசோதனை. [Virus isolation] PCR பரிசோதனை நோய் ஏற்பட்ட மாடுகளில் 35-40 நாட்கள் வரை வைரஸ் வாழக் கூடியது.

**மாடுகளுக்கு ஏற்படும் பொருளாதார பாதிப்புகள் எவை ?**

கண் தெரியாமல் போதல். [corneal opacity] உணவு உட்கொள்ளததால் உடல் மெலிதல். உடல் வலு குறைதல். இதனால் வண்டி இழுக்கும் ஆற்றல் குறைதல். பால் உற்பத்தி குறைதல். கொப்பளம் மடியில் ஏற்படுவதால் மடியழற்சி [ Mastitis] ஏற்படல். இதனாலும் பால் குறைதல். கருச்சிதைவு. ஆண் மாடுகளில் மலட்டு தன்மை ஏற்படுதல். தோலின் தரம் குறைதல். [தோல் ஏற்றுமதி பாதிக்கபடல்] கன்றுகள் சுவாச நோய்களால் இறக்கின்றன.

**சிகிச்சை முறைகள் யாவை?**

வேதனையை குறைத்தல் [pain killers] . காய்ச்சலை குறைத்தல் [ Anti pyretic], வீக்கத்தை குறைத்தல்[ edema reducers] மற்றும் இரண்டாம் நிலை நுண்ணுயிர் தொற்றை குறைப்பதற்கான சிகிச்சையை [ Anti biotic treatments] செய்தல்.

பலவீனமடைந்த மாடுகளுக்குரிய சிகிச்சையை [விற்றமின்கள் மற்றும் கனியுப்புகள்] , நோய் எதிர்ப்பு சக்தியை [ immunity] கூட்டும் பொருட்களை வழங்குதல். சுவாசப் பிரச்சினை உள்ள கன்றுகளுக்கு ஆவி/வேது பிடித்தல். காயங்களுக்குரிய சிகிச்சை. புழு வராமல் தடுத்தல். [Myasis treatment] நவீன கால்நடை மருத்துவத்தையும் பாரம்பரிய மருத்துவத்தையும் கால்நடை மருத்துவரின் ஆலோசனையுடன் செய்தல்.

**நோய் வராமல் தடுப்பது எப்படி?**

தடுப்பூசி போடுதல் [vaccination ] . இலங்கையிலும் தற்போது இந்த நோய்க்குரிய தடுப்பூசிகள் உள்ளன. காவிகளான நுளம்புகள், உண்ணிகள் மற்றும் கடிக்கும் மாட்டு ஈக்கள் பெருகும் இடங்களை அழித்தலும் பண்ணைகளை சுத்தமாக பேணுதலும் அவசியமானது. நோய் ஏற்பட்ட மாடுகளை தனிமைப் படுத்தலும் [QUARANTINE] அந்த மாடுகளை தேவையில்லாமல் வேறு இடங்களுக்கு செல்வதை கட்டுப்படுத்தலும். மாடுகள் கூட்டமாக மேயும் நிலையை தவிர்த்தல். இந்த நோய் நிலைமை இருக்கும் பகுதிகளில் இருந்து இல்லாத இடங்களுக்கு மாடுகளை பிரயாணம் செய்வதை தவிர்த்தல்/ தடுத்தல். கால்நடை சிகிச்சையாளர்கள் மாடுகளுக்கு மருந்துகளை ஏற்றும் ஒவ்வொரு தடவையும் புதிய ஊசிகளை பயன் படுத்த வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 819





சம்புவரையர் கடைசியாக் கூறிய வார்த்தைகள் அவன் காதில் விழுந்தன. "ஐயா! இளவரசர் விடயத்தில் உங்களுக்கு வேறு என்ன சந்தேகம் இருந்தாலும், பெண்கள் சம்பந்தமான சந்தேகம் மட்டும் வேண்டியதில்லை. பெண்களை அவர் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை" என்று சொன்னான்.

பழுவேட்டரையர் புன்னகையுடன், "அப்படியானால் அவரை நாம் இங்கே அழைத்ததின் நோக்கம் எப்படி நிறைவேறும்?" என்று கேட்டார்.

"அது சம்புவரையர் திருமகளின் அதிஷ்டத்தையும் சோழ சாம்ராஜ்யத்தின் அதிஷ்டத்தையும் பொறுத்தது."

"பார்த்திபேந்திரா! மணிமேகலையின் அதிஷ்டம் ஒருபுறம் இருக்கட்டும்! வரும் போதே எதற்காக இளவரசர் இவ்வளவு கடுகடுத்த முகத்துடன் வருகிறார்? எதற்காக இப்படி விஷமமாகப் பேசுகிறார்? அவரை நீ எப்படியாவது இங்கிருந்து சமாதானமாக அழைத்துப் போனால் போதும் என்று தோன்றுகிறது!" என்றார் சம்புவரையர்.

"வெள்ளாற்றங்கரை வரையில் இளவரசர் சுமுகமாகவும் குதூகலமாகவும் வந்தார். பின்னர் இந்த வந்தியத்தேவனும் வைஷ்ணவன் ஒருவனும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் ஏதோ சொல்லியிருக்க வேண்டும். அது முதல் இளவரசரின் குணம் மாறியிருக்கிறது"

"நாங்களும் அப்படித்தான் நினைத்தோம் இப்போது என்ன செய்யலாம்? அந்தத் துஷ்டப் பையனும் உங்களோடு வந்திருக்கிறானே?"

"நீங்கள் கொஞ்சம் பொறுமையாயிருங்கள். நான் எல்லாம் சரிப்படுத்தியிருக்கிறேன். அந்தப் பையனுடன் எனக்கும் ஒரு சண்டை இருக்கிறது. அதை நான் சமயம் பார்த்துத் தீர்த்துக் கொள்கிறேன்" என்றான் பார்த்திபேந்திரன்.

கரிகாலனும் மற்ற இருவரும் முன் வாசல் மேன்மாடத்துக்குச் சென்றபோது அங்கிருந்த பெண்கள் திரும்பிப் படியில் இறங்கி வரும் சமயமாயிருந்தது.

கரிகாலன் கந்தமாறனைப் பார்த்து, "நண்பனே! தாய்மார்களையெல்லாம் நமக்காக இங்கு வந்து காத்திருக்கும்படி செய்யலாமா? அது பெருந்தவறு. நாம் அல்லவா இவர்கள் இருக்குமிடம் சென்று நமது வணக்கத்தைச் செலுத்த வேண்டும்?" என்று கூறிவிட்டுப் பெண்மணிகளுக்கு வணங்கி வழி விட்டு நின்றான். ஒவ்வொருவராக இறங்கிய போது கந்தமாறனிடம் யார் யார் என்று கேட்டுத் தெரிந்து கொண்டான்.

நந்தினியைப் பார்த்ததும், "ஓ! பழுவூர் இளையபாட்டி அல்லவா? உண்மையாகவே வந்திருக்கிறார்களா? மிகவும் சந்தோஷம்!" என்றான். நந்தினி ஒன்றும் சொல்லாமல் அவனைத் தன் கூரிய கண்களால் பார்த்துவிட்டுச் சென்றாள். அப்பார்வையின் தீட்சண்யத்தினால் கரிகாலனுடைய உடம்பு சிறிது நடுங்கிற்று. மறுகணமே அவன் சமாளித்துக் கொண்டு, பின்னால் வந்த மணிமேகலையைப் பார்த்து, "ஓகோ! இவள் உன் தங்கை மணிமேகலையாக இருக்க வேண்டும். சித்திரத்தில் எழுதிய கந்தர்வ கன்னிகையைப் போல இருக்கிறாள்.

இவளுக்கு விரைவில் ஒரு நல்ல மாப்பிள்ளையைப் பார்த்துக் கலியாணம் பண்ணிவைக்க வேண்டும்!" என்றான். மணிமேகலை வெட்கத்தினால் குழிந்த கன்னங்களுடன் வந்தியத்தேவனைக் கடைக் கண்ணால் பார்த்துவிட்டு மடமடவென்று கீழே இறங்கினாள்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## முனியாண்டியின் மூளை



முனியாண்டி இரண்டு நாட்களாய் கவனித்து கொண்டுதான் இருக்கிறான். அவன் அப்பா காத்தமுத்து பயந்துவிட்டவர் போல் காணப்படுகிறார். இவன் பள்ளிக்கு செல்லும் முன்னர் அப்பாவிடம் சொல்லிவிட்டுத்தான் செல்வான். இந்த இரண்டு நாட்களாக அப்பா சரியில்லை என்பது அவர் முகபாவனையில் கண்டு கொண்டான்.

முன்னெல்லாம், போயிட்டு வர்றேம்ப்பா என்று சொன்னால் சூதனமாப் போயிட்டு வா என்று மகிழ்ச்சியுடன் சொல்லி அனுப்புவார். இப்பொழுது அவனை பயந்து பயந்து பார்க்கிறார். பத்திரம், பத்திரம் என்று அடிக்கடி சொல்லி அனுப்புகிறார். காலையில் அம்மாவிடம் கூட முனியாண்டி கேட்டான், அப்பாவுக்கு என்னம்மா ஆச்சு, இரண்டு நாட்களாக பயந்தமாதிரி இருக்கின்றார். அம்மா, சட்டென அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ சீக்கிரம் ஸ்கூலுக்கு கிளம்புற வழியப் பாரு என்று அவனை விரட்டுவதிலேயே குறியாயிருந்தாள்.

முனியாண்டி அந்த ஊரில் உள்ள அரசு பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கும் பையன். அவன் அப்பா காத்தமுத்து அந்த ஊரில் இருந்த ஒரு பணக்காரரின் பங்களாவில் காவல்காரனாய் இருக்கிறார். தினமும் மாலை ஆறு மணிக்கு பணக்காரன் வீட்டு காம்பவுண்டு கேட்டுக்கு காவலுக்கு சென்றால் மறுநாள் எட்டு மணிக்குத்தான் வீட்டுக்கு வருவார். முனியாண்டி ஸ்கூல் போகும் வரை விழித்து அவனை பள்ளிக்கு அனுப்பிவிட்டு தூங்கப்போவார். பகலில் தூங்கினால் தானே இரவு முழுக்க தூங்காமல் காவல் காக்க முடியும்.

வகுப்பில் முனியாண்டிக்கு மனதே சரியில்லாமல் இருந்தது, அவன் அப்பா ஏன் பயந்த மாதிரி இருக்கிறார். அவர் நல்ல உயரமும் நல்ல தைரியசாலியாகவும் இருப்பவர். எப்பொழுதும் சிரிப்புடனே இருப்பவர், இரண்டு நாட்களாகத்தான் இப்படி இருக்கிறார். என்னவென்று தெரியவில்லையே இப்படி சிந்தனையிலேயே இருந்தவனை யாரோ பிடித்து உலுக்கவும் சட்டென சுயநினைவுக்கு வந்தான்.

டேய் என்னாச்சுடா, அப்படியே யோசனையாகவே இருக்கின்றாய்? பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் நண்பன் ஆரோக்கியம் கேட்டான்.

ஒன்றுமில்லையடா, என்று இவன் சொன்னாலும், ஆரோக்கியம் விடவில்லை. உண்மையை சொல்லு, என்று வற்புறுத்தவே, இவன் தன் தந்தை இப்படி கவலையில் இருப்பதை சொன்னான். அவ்வளவு தானே கவலையை விடு, நான் அந்த பங்களா வழியாகத்தான் பள்ளிக்கு வருகிறேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஏதாவது செய்ய விரும்பினால், நீங்கள் எந்தத் தரவரிசையில் இருக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. – *கல்பனா சாவ்லா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புதியன கழிதலும் பழையன புகுதலும்

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையாலே என்கிறது நம் தமிழ்.

புதிய தொழில்நுட்பங்களை – புதிய கண்டுபிடிப்புகளை ஏற்றுக் கொள்வது காலத்தினுடைய தேவை.

இவ்விதம் புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல என்பது வழுவற்ற புகுதலைக் குறிப்பதாகும்.

ஆனால் நாம் நல்லவற்றை இழந்து நமக்குக் கெடுதிதரக்கூடியவற்றை புகுத்திக் கொண்டோம். இதுவே நாம் செய்த பெரும் தவறாகும்.

இதற்குப் பல உதாரணங்கள் உண்டு. முன்பெல்லாம் வானொலி கேட்கின்ற பழக்கம் நம் மத்தியில் இருந்தது. அதேநேரம் அன்றைய வானொலிகளின் செயற்பாடுகள் அறிவியலை – மனிதநேயத்தை – சமூக விழுமியங்களை எடுத்துரைப்பதாக அமைந்திருந்தன.

இதன் காரணமாக வானொலியைக் கேட்பது பொது அறிவை – தனி மனித ஆளுமையை உன்னதமாக்குவதாக விளங்கியது.

ஆனால் இன்று நிலைமை வேறுவிதமாயிற்று. அநேகமான வானொலி உரையாடல்கள் நேரத்தை வீணடிப்பதாகவும் விரசமானவையாகவும் இருப்பதைக் காண முடிகிறது.

தவிர, வானொலிகளைக் கடந்து தொலைக்காட்சி சேவைகள் மக்கள் சமூகத்தை கடுமையாக ஆக்கிரமித்துள்ளன.

அதிலும் சின்னத்திரையில் வருகின்ற தொடர் நாடகங்கள் எங்கள் குடும்பக் கட்டுமானத்தைக் கந்தறுக்கும் அளவுக்கு ஓர் இனம் புரியாத வியாதியாகிவிட்டது.

இதற்கும் மேலாக, வீடுகளில் சமையல் செய்து உணவு பரிமாறுகின்ற பண்பாடு மலையேறி, உணவுக் கடைகளில் – ஹோட்டல்களில் சாப்பிடுகின்ற புதிய நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

அதேநேரம் ஹோட்டல்களில் உணவு அருந்துகின்ற பழக்கத்தைக் கொண்ட மேற்குலக நாட்டவர்கள், இப்போது வீடுகளில் சமைத்து உண்ணும் பழக்கத்தைப் பின்பற்றுகின்றனர்.

குறிப்பாக, எங்கள் வாழ்வியலில் இருந்த **பழங்கஞ்சி** எங்களை விட்டுக் கழிந்தும் கடந்தும் போயிற்று.

ஆனால் வெளிநாட்டவர்கள் பழங்கஞ்சியை ஆரோக்கியத்தின் அருமருந்தாகக் கண்டறிந்து, அதனை தங்களின் முதன்மைக்குரிய காலை உணவாக ஆக்கியுள்ளனர்.

இங்குதான் புதியன கழிதலும் பழையன புகுதலும் என்பதாக எங்கள் வாழ்வியல் நடைமுறைகள் மாறவேண்டியுள்ளது.

ஆம், எங்கள் முன்னோர்கள் கடைப்பிடித்த அம்மியில் அரைத்தல், உரலில் இடித்தல், மண் சட்டியில் சமைத்தல் என்பது போன்ற பழைய வாழ்க்கை முறைகளை மீண்டும் நாம் உள் வாங்கிக் கொள்ள வேண்டும்.

அதுவே எங்கள் பண்பாடும் பழக்கவழக்கமும் செழுமையுறுவதற்கு வழிவகுக்கும்.

# பெண்கள் விண்வெளி வரை சென்றுவிட்டபோதும் ரயில் நிலைய அதிபர்கள் பதவி மறுக்கப்படுகிறது

## அநீதியை எதிர்த்துப் பெண்கள் மனுத்தாக்கல்

(கொழும்பு)

பெண்கள் விண்வெளி வரை கோலோச்சி விட்ட போதிலும் இலங்கையில் புகையிரத நிலைய அதிபர் பதவிக்குத் தொடர்ச்சியாக ஆண்களே உள்ளீர்க்கப்பட்டு வரும் நிலையில் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானியிலும் காணப்படும் பெண்கள் விண்ணப்பிப்பதைத் தடுக்கும் பாலின அடிப்படையிலான கட்டுப்பாட்டை எதிர்த்து இரண்டு பெண்கள் அடிப்படை உரிமைகள் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஏ.எச்.எம்.டி.நவாஸ், பிரியந்த பெர்னாண்டோ மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகிய மூவர் அடங்கிய ஆயம் முன்னிலையில், இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி ஜூன் 13 ஆம் திகதி தொடருந்து திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் தொடருந்து நிலைய அதிகாரிகளுக்காக 106 வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இருப்பினும் ஆண் விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் எனக் குறித்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த விடயம், சட்டத்தின் முன் சமத்துவத்தை உறுதிசெய்யு பாலின அடிப்படையிலான பாகுபாட்டைத் தடைசெய்யும் அரசியலமைப்பின் பிரிவுகள் 12(1) மற்றும் 12(2) இன் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட மனுதாரர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக மனுதாரர்களின் சட்டத்தரணி நீதிமன்றில் குறிப்பிட்டார்.

மேலும் இந்தக் கட்டுப்பாடு மனுதாரர்கள் தங்கள் விருப்பப்படி வேலையில் ஈடுபடும் உரிமையையும் மீறுவதாக அவர் வாதிட்டார்.

அதன்படி மனுதாரர்கள் ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே தகுதியை வரையறுக்கும் அந்த வர்த்தமானி அறிவிப்பிலுள்ள பாரபட்சமான விதியை நீக்க உத்தரவிடுமாறு கோரியுள்ளனர்.

மனுதாரர்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட வாதங்களைக் கருத்தில் கொண்ட நீதிமன்றம் குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. குறித்த வழக்குத் தொடர்பான விசாரணை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு திகதியிடப்பட்டுள்ளது. (ம-7)

### சட்டவிரோத கொள்கலன் விடுவிப்பு விவகாரத்தில்

# எனக்குத் தொடர்புண்டெனில் அதனை ஆதார பூர்வமாக நிரூபித்துக் காட்டுங்கள்

## எதிரணிக்குச் சவால் விடுகிறார் பிமல்

(கொழும்பு)

எதுவித சோதனைகளும் இன்றி கொழும்பு துறைமுகத்திலிருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமைக்கும் எனக்கும் தொடர்புண்டென எதிரணியினர் கருதினால் அதனை ஆதாரங்களுடன் நிரூபித்துக்காட்டுங்கள். நான் குற்றவாளி எனில் சிறைசெல்லக்கூடத் தயாராகவுள்ளேன் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படுவோர் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

குறித்த கொள்கலன்களை விடுவிப்பதற்கு எனக்கு எதுவித அதிகாரமும் இல்லை கொள்கலன்களை விடுவித்ததில் எனக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை.

முன்னதாக இந்தக் கொள்கலன் விடுவிப்பு விடயத்தில்மேல்மாகாண ஆளுநரைத் தொடர்புபடுத்த எதிர்க்கட்சியினர் முயற்சித்தனர். அது இயலாமல் போயுள்ள நிலையில் எம்முடன் அந்தக் குற்றச்சாட்டை இணைக்க எதிர்க்கட்சியினர் கடும் பிரயத்தனம் மேற்கொள்கின்றனர் எனப் பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## நல்லூரானின் பெருந்திருவிழா தொடர்பில் பொது மக்களுடனான கலந்துரையாடல்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தப் பெருமானின் விசுவாவசு வருட மகோற்சவப் பெருவிழாவானது இம்மாதம் 28ம் திகதி வைரவர் சாந்தி உற்சவத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 28.08. 2025ம் திகதியில் நிறைவடையவுள்ளது.

இப்பெருந்திருவிழா முன்னாயத்தப் பணிகளில் யாழ்ப்பாணம் மாநகரசபை ஈடுபட்டுள்ளது. அதன் ஓர் அங்கமாக உற்சவகால வீதித் தடைகளுக்குள் வதியும் பொது மக்களுடனான உற்சவகால ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 19.07.2025 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் வீதித் தடைப் பகுதிக்குள் வதியும் பொது மக்கள் யாவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி வி.மதிவதனி அவர்கள் அறிவித்துள்ளார். (ம-7)

## தென்னிலங்கையை உலுக்கும் துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரம்

### நேற்றும் பாணந்துறையில் துப்பாக்கிச் சூடு

பாணந்துறை, ஹிரணப் பகுதியில் நேற்று (11) அதிகாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் மாலமுல்லாவைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் மற்றும் சந்தேக நபர்கள் யார் என்பன தொடர்பில்மூன்று பொலிஸ்குழுக்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. (ம-7)

## நீரில் மூழ்கி ஒருவர் பலி

(மகியங்கனை)

மகியங்கனை நெலும் வாவியில் குளிக்கச் சென்ற நபரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பண்டாரவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய நபர் என மகியங்கனைப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## பிரதேசசபை உறுப்பினரொருவர் பொலிஸாரால் கைது

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

நபரொருவரைத் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டின் பிரகாரமே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 12

சொக்கன்

சிலர் ஹிட்லரின் வழியைப் பின்பற்றித் துப்பாக்கி அல்லது சயனைட் உதவியுடன் மரணத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். இன்னும் சிலர் எதிரிப் படையினரிடம் சிக்கினார்கள். மற்றவர்கள் தப்பித்து ஓடிக் காணாமல் போனார்கள்.

யுத்தத்துக்குப்பிறகு ஒட்டுமொத்த உலகமும் அமைதியைத் தேடிக் கொண்டிருந்தநேரம் யூதர்களின் மனம் மட்டும் ஆறவில்லை.


ஐயா பெரியவர்களே நீங்களெல்லாம் நிலம் இழந்தீர்கள், அல்லது பணம் இழந்தீர்கள் அல்லது பதவி இழந்தீர்கள் நாங்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டு நிர்க்கதியாக நிற்கிறோம். இந்தக் கொடுமைகளுக்குப் பழிவாங்காமல் விடமாட்டோம்.

ஆனால் இனிமேல் யாரைப் பழிவாங்க முடியும் ஹிட்லர்தான் மேலே போய்ச் சேர்ந்துவிட்டாரே!

அதனால் என்ன? ஹிட்லருக்குச் சமமாக அல்லது அவரைவிட ஒரு படிமேலே போய் யூதர்கள் மேல் இரக்கமற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட நாஜி கொடுமைக்காரர்கள் பலர் இன்னும் உயிரோடுதானே இருக்கிறார்கள். அவர்களைத் தேடிப் பிடித்துத் தண்டனை கொடுப்போம்! இப்படிச் சொன்ன யூதர்கள், “நாக்மின்” என்று பெயர் சூட்டிக் கொண்டார்கள். இதன் அர்த்தம், “பழிவாங்குபவர்கள்!”

நாக்மின் என்பது யாரும் அதிகாரப்பூர்வமான ரிப்பன் வெட்டித் தொடங்கிவைத்த அமைப்பு இல்லை. ஹிட்லர் படைகளின் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட யூதர்கள் பலர் தாங்களே ஒருங்கிணைந்து இந்த இரகசிய இயக்கத்தை உருவாக்கினார்கள்.

ஒருவிதத்தில் யூதர்களின் முதல் உளவுத்துறை அதுதான். முன்பு ஹிட்லருக்குக் கீழே பணிபுரிந்த முக்கியப் புள்ளிகளில் யார் யார் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள் என்று முதலில் பட்டியல் போட்டார்கள். அதன்பிறகு அவர்கள் இப்போது எங்கே என்ன வேடத்தில் ஒளிந்திருக்கிறார்கள் என்பதைக் கவனமாகத் துப்புத்துலக்க ஆரம்பித்தார்கள்.



அடுத்தபடியாக இந்த முன்னாள் நாஜிக்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடங்கின. சிலரைக் காட்டிக்கொடுத்துக் கைது செய்து உள்ளே தள்ளினார்கள். இன்னும் சிலரை நேரடியாகக் கொலை செய்து முடித்துவைத்தார்கள். இதற்கெல்லாம் அவர்கள் யாருடைய அனுமதியையும் எதிர்பார்க்கவில்லை.

இந்தக் காலகட்டத்தில் தான் யூதர்களுக்கான தனி நாடு (இஸ்ரேல்) உருவாகியிருந்தது. அவர்களுக்குப் பல அரசியல் பிரச்சினைகள், எல்லைக் குளறுபடிகள் மற்றதலைவலிகள் இதையெல்லாம் ஒருவழியாக ஒழுங்கு செய்வதற்குள் இஸ்ரேல் ஆட்சியாளர்களுக்கு நாக்கு தள்ளிவிட்டது.

இப்படி இஸ்ரேல் தனது ஸ்டார்ட்டிங் ட்ரபுள்களைச் சமாளிக்கப் போராடிக்கொண்டிருந்த நேரம் இன்னொரு பக்கம் நாக்மின்களிடமிருந்து தப்பிய முன்னாள் நாஜிப் படையினர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஆங்காங்கே செட்டிலாகியிருந்தார்கள். பொய்ப் பெயர்தான், டுபாக்கூர் அடையாளங்கள் தான். ஆனால் யாருடைய தொந்தரவும் இல்லாத நிம்மதியான வாழ்க்கை போதுமே!

*1954* ஆம் வருடம் இஸ்ரேலுக்கு ஒரு தகவல் கிடைத்தது. அந்த அழுக்குப் பன்றி இப்போது அர்ஜென்டினாவில் இருக்கிறது. இங்கே “அழுக்குப் பன்றி” என்று குறிப்பிடப்படுபவர் ஒரு முன்னாள் நாஜி. அவர் பெயர் அடால் ஃப் ஐக்மென்.

ஜேர்மனியில் நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்த ஐக்மென் சின்ன வயதிலேயே தாயை இழந்துவிட்டார். அதன்பிறகு அவரது குடும்பம் ஆஸ்திரியாவுக்குக் குடிபெயர்ந்தது.

ஐக்மெனுக்குப் படிப்பு ஏறவில்லை. பள்ளிக்கூடத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டு வேலைக்குப் போனார். அதுவும் சரிப்படவில்லை.

இதனால் ஐக்மென் தாழ்வு மனப்பான்மையில் மூழ்கினார். எப்படியாவது ஏதாவது ஒரு விடயத்தில் தன் திறமையை நிரூபித்துவிட வேண்டும் என்று துடித்தார். கிட்டத்தட்ட இதே நேரத்தில்தான் ஹிட்லர் ஐரோப்பா முழுக்கப் பிரபலமாக ஆரம்பித்தார். அவர் ஹீரோ வா, வில்லனா என்று புரியாமல் குழம்பியது உலகம்.

அடால்ஃப் ஐக்மென்னுக்கு ஹிட்லரைப் பிடித்திருந்தது. அவரையே தனது ஆதர்ஷமாக ஏற்றுக்கொண்டு நாஜிக் கட்சியில் இணைந்துவிட்டார்.

கட்சிஎன்றால் பொதுக்குழு, செயற்குழு, உள்கட்சி, ஜனநாயம், தேர்தலில் ஜெயித்து எம்.எல்.ஏ ஆகி ஆட்சியைப் பிடிப்பதெல்லாம் கிடையாது, ஹிட்லர் இன்னும் பெரிய திட்டங்கள் வைத்திருந்தார். அவற்றை நிறைவேற்றுவதற்கான ஒரு படையைத் திரட்டிக்கொண்டிருந்தார். இந்தப் படையில் அடால்ஃப் ஐக்மென்னுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பு யூதர்களை வெளியேற்றுவது! ஏதோ காரணத்தால் தன் இராஜ்ஜியத்தில் யூதர்கள் யாரும் இருக்கக் கூடாது என்று முடிவெடுத்துவிட்டார் ஹிட்லர். ஜேர்மனியில் மட்டுமில்லை அவர் எங்கெல்லாம் கால் பதிக்கிறாரோ அங்கெல்லாம் களை பிடுங்குவது போல் யூதர்கள் பிய்த்து எறியப்பட்டார்கள்.

ஆரம்பத்தில் ஹிட்லர் படையினர் கொலை ஆயுதத்தைக் கையில் எடுக்கவில்லை. யூதர்களை ஜஸ்ட் வெளியே துரத்தினார்கள். எங்கே யாவது போய்விடுங்கள் எப்படியாவது பிழைத்துக்கொள்ளுங்கள் ஹிட்லர் கண்ணில் மட்டும் பட்டு விடாதீர்கள்.

கொஞ்ச நாள் கழித்து அடால்ஃப் ஐக்மென் யோசித்தார். இப்போது இந்த யூதர்களெல்லாம் எங்கே போவார்கள்? அவர்கள் எந்த நாட்டில் தஞ்சம் புகுந்தாலும் சீக்கிரத்தில் ஹிட்லர் அந்த தேசத்தையும் ஆக்கிரமித்துவிடுவார் அதன்பிறகு மீண்டும் யூதர்களை அங்கிருந்து துரத்தவேண்டும். அநாவசியத் தொல்லை.

இந்தத் தொந்தரவுக்குப் பதிலாக யூதர்களை மொத்தமாக அழித்துவிடலாம் என்றார் ஐக்மென். இந்தத் திட்டத்துக்கு அவர் சூட்டிய பெயர் கடைசித் தீர்வு. ஐக்மென்னின் யோசனைக்கு சீனியர் நாஜிக் களின் அனுமதி உடனடியாகக் கிடைத்து விட்டது மளமளவென்று இதனை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் நடந்தன. அதன் பிறகு நிகழ்ந்ததுதான் உச்சகட்டக் கொடுமை ஆண், பெண், சிறியவர், பெரியவர் என்று வித்தியாசமே பார்க்காமல் யூதர்கள் உடனுக்குடன் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். யூத இனத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற ஒரு காரணம் போதும் விசாரணை எதுவும் கிடையாது உடனடித் தண்டனைமட்டுமே.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த...

மாணவர்கள் உயர்தரக் கல்விக்கு தகுதி பெற்றுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் A.K.S. இந்திகா குமாரி தெரிவித்தார்.

இது பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 73.45 சதவீதமாகும்.

அனைத்துப் பாடங்களிலும் 9 'ஏ' சித்திகளைப் பெற்ற 13,392 மாணவர்கள் உள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இது மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 4.15 சதவீதமாகும்.(ம-7)


வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள லொத்தர் விற்பனை நிலையங்களுக்கு வேலையாட்கள் தேவை. முன்அனுபவம்விரும்பத்தக்கது.

(C-3390)

077 603 1723


## யாழ்.வேம்படியில்...

பரீட்சைக்குத் தோற்றி இருந்தனர்.

அவர்களில் 120 மாணவிகள் 9ஏ பெறுபேறுகளையும், 36 மாணவிகள் 8ஏ பெறுபேறுகளையும் 25 மாணவிகள் 7ஏ பெறுபேறுகளையும் பெற்றதுடன், பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவிகளும் சித்தியடைந்துள்ளதாகப் பாடசாலை அதிபர் ஜி.டி. தேவராஜா அறிவித்துள்ளார். (ம-7,33)

## யாழ்.இந்துவில்...

பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 345 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி இருந்தனர்.

அவர்களில் 82 மாணவர்கள் 9ஏ பெறுபேறுகளையும், 73 மாணவர்கள் 8ஏ பெறுபேறுகளையும் 33 மாணவர்கள் 7ஏ பெறுபேறுகளையும் பெற்றுள்ளனர்.

பரீட்சையில் தோற்றிய 345 மாணவர்களில் 342 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் ஆர்.செந்தில்மாறன் அறிவித்துள்ளார். (ம-7,33)

## மோ.சைக்கிள்...

அப்பகுதியில் பதற்ற சூழ்நிலையொன்று உருவாகியிருந்தது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனை போக்குவரத்துப் பொலிஸார் தாங்கள் வைத்திருந்த தடியை நீட்டி நிறுத்த முயன்றுள்ளனர்.

இதன்போது, இளைஞன் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார். (ம-7)

*(இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை உயிரிழந்தவரின் விபரங்கள் வெளியாகவில்லை)*

## சிறுப்பிட்டியில்...

சேர்ந்த இராமச்சந்திரன் ஜெயகாந்தன் (வயது-40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## 66 துப்பாக்கி...

காலப்பகுதிக்குள் நாட்டில் 66 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் 37 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 37 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றில் 48 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## செம்மணி மனிதப்...

விசாரணையில் உண்மை, நீதி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை உறுதி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுவரை 65க்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அக்கட்சி வலியுறுத்தியதுடன், இது இப்பகுதியில் நடந்ததாகக் கூறப்படும் அட்டூழியங்களை எடுத்துக் காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், தடயவியல் வெளிப்படைத்தன்மை, பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் மற்றும் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடருதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் கடிதம் வலியுறுத்துகிறது.

அதேநேரம், அனைத்து தடயவியல் அறிக்கைகள் மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனைகளையும் பொதுவில் வெளியிட வேண்டும்என்றும் கடிதம் அழைப்பு விடுத்துள்ளது. (ம-7)

## உயர்...

நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 05ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை ஆணையாளர் நாயகம் A.K.S. இந்திகா குமாரி இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, 2025ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சை 2026ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற உள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-7)

## ராஜித...

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சமர்ப்பித்த கோரிக்கையை கருத்தில் கொண்டு, சந்தேக நபரை கைது செய்வதில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு எந்தத் தடையும் இல்லை என்று நீதவான் ஹர்ஷன கெகுனுவெல தெரிவித்தார்.

மீன்வள துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்ட மணல் அகழ்வுத் திட்டத்தை வெளிநாட்டு நிறுவனத்திற்கு சட்டவிரோதமாக ஒப்படைத்து, அரசாங்கத்திற்கு 2.63 மில்லியனுக்கும் அதிகமான இழப்பை ஏற்படுத்தியது குறித்து விசாரணை நடத்தப்பட்ட போது சந்தேக நபரான ராஜித சேனாரத்தனவுக்கு எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம-7)


நயினையில் அமுத சுரபி யாழில் அதிர்ஷ்ட சுரபி தொடரும்

நாக அதிர்ஷ்ட அலை மூலம் 2025.07.10ஆம் திகதி இடம்பெற்ற சீட்டிழுப்பில் மஹஜன சம்பத டிக்கட்டில் முதற்பரிசாக 25,00000 மற்றும் 100,000, சுபவசக் மூலம் 50,000 பரிசு ச.கனகலிங்கம் முகவரூடாகவும் மற்றும் சசிரி 200,000 க.திலகவதி மூலமும் வெல்லப்பட்டுள்ளது.

அத்துடன் புதிய விசேட லொத்தர் "சுப தவசக்" லொத்தர்களை விரைந்து சென்று எமது லொத்தர் கூடுகளில் பெற்றுக் கொள்ளுங்கள். (C-3390)



மஹஜன சம்பத — திகதி 2025.07.11 — சீட்டிழுப்பு இலக்கம் 5887 — Y 6 3 7 5 7 3

அத சம்பத — Y 7 5 7 3 — சீட்டிழுப்பு இலக்கம் 0462 — National Lotteries Board

சுப தவசக் — திகதி 2025.07.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0003 — ரிஷபம் 07 09 23 29

தன நிதானய — திகதி - 2025.07.11 — சீட்டிழுப்பு இலக்கம் - 1917 — G 28 33 39 72 G — Double Chance 77294

மெகா பவர் — திகதி 11/07/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2235 — T 03 04 18 19 59

ஜய — திகதி 2025.07.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0155 — C 1 2 9 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4129 — சீட்டிழுப்பு திகதி 11.07.2025 — S 18 34 54 63 — S

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.07.11 — சீட்டிழுப்பு இலக்கம் 1196 — மகரம் 20 35 49 54 மகரம் — 85186 — 10

உத்தியோகபூர்வ முடிவுகள் — 11.07.2025 — வெற்றி வாரம் 0595 — A — 6 8 9 6 5 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20.187.735.20 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2861 — சீட்டிழுப்பு திகதி 2025.07.11 — தினம் வெள்ளிக்கிழமை — 57 64 69 74 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 74,491,052.00

சனிதா — திகதி 11.07.2025 — வெற்றி வாரம் 5022 — 22 28 44 65 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00

சசிரி — வெற்றி வாரம் 723 — சீட்டிழுப்பு திகதி 11.07.2025 — வெள்ளிக்கிழமை — 13 21 26 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4573 — சீட்டிழுப்பு திகதி 11.07.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 13 31 36 49 — சிம்மம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,073,805.60

லக்பிம — 2037 — 11.07.2025 — வெள்ளிக்கிழமை — C 06 23 58 63 74 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.581,950,141.00

அத கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2687 — சீட்டிழுப்பு திகதி 2025.07.11 — 41 45 55 63 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71.008.161.60


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

**தொழில்நுட்பப் பிரிவு**

# A/L 2027

ஆரம்பம் : 14.07.2025
(திங்கட்கிழமை)
நேரம் : மாலை 3.15 மணி

A/L 2025, 2026 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.


தொடர்புகளுக்கு : 077 0175 346

(C-3387)



## மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு

சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்கு மதி செய்யப்பட்ட தச்சுவேலை மெசின் (Wood working Machine) "Lida" ஒரிஜினல் 12" மற்றும் 10" Sliding இணைப்புடன் இப்பொழுது எம்மிடம். இதை ஒத்த போலி கள் தரம் குறைந்த மோட்டாருடன் சந்தையில் ஏமாந்து விடாதீர்.



"நாங்கள் உங்களோடு"

**ஆர் . என் . கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

(4775)



புதிய பிரிவுகள் ஆரம்பம்
19.07.2025

தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
aat (SriLanka)
Qualification:- G.C.E O/L 6 Passes
(Medium - Tamil & English)

✧ A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களில் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level I,II
Qualification:- G.C.E A/L 3 Passes(Medium - Tamil & English)

Further Details:- Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382
0774405917

(C-3380)



## Techna
Technical Institute

THE BEST QUALITY EDUCATION FOR TECHNOLOGY STREAM

Technatechnicalinstitute

**A/L தொழினுட்பப்பிரிவு**

**புதிய கல்வியாண்டு**

# A/L 2027

அனுமதி: 13.07.2025 ஞாயிறு, காலை 8.00 மணிக்கு.

077 170 3549 வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

(C-3392)



## காணி விற்பனைக்கு

நக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளியில்
2 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு
076 342 4705

(4766)



**கனடா - வரி இல்லாமல்**
**விரைவு பொதிகள் சேவை**

5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-27 Kg 2680/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2200/- | Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 076 822 6237

(C-3389)



## வேலைவாய்ப்பு

சூப்பர் மாக்கட் ஒன்றிற்கு
Part time - கூலி பணியாளர் தேவை.
வயது : 25 - 35 (ஆண்கள்)
நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்

ஹப்பி சூப்பர் மாக்கட் - உரும்பிராய்
076 422 1761

(1319)



## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant இற்கு சமையல் அனுபவம் உள்ள வேலையாட்கள். உணவு பரிமாறுபவர்கள் (waiter) தேவை.

076 830 3931

(4772)



## வேலைக்கு ஆள் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 428 6976

(4767)



**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**
**நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு**




| | |
|---|---|
| திருமணப் பட்டுச்சாறிகள் | ஸ்கேட், பிளவுஸ் |
| கொட்டன் சாறிகள் | சேட், ரீசேட் |
| சல்வார்கள் | பெட்சீற் |
| சல்வார் துணிகள் | மொடர்ன் ரெஸ் |
| ரெடிமேட் சல்வார்கள் | வேஷ்டிகள் |
| பார்ட்டி புறொக் | லெகீன்ஸ் |
| டொப் | லெஹங்கா |
| கவுண் | சிறுவர்களுக்கான ஆடைகள் |

மற்றும் தாராளமான ஆடைத் தெரிவுகள்

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம் : 12.07.2025 முதல் 05.08.2025 வரை
(வாரத்தில் 07 நாட்களிலும் வியாபாரம் நடைபெறும்)

(1318)



**பிரபல உணவகமொன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை**

- சிட்டை எழுதுனர் இருபாலாரும் (நாள் 1 - 2200)
- மரக்கறி வெட்டுபவர் (நாள் 1 - 2500)
- பார்சல் கட்டுபவர் (நாள் 1 - 2500)
- உணவு பரிமாறுபவர் (நாள் 1 - 2000)
- தேநீர் தயாரிப்பாளர் (நாள் 1 - 2500)
- துப்பரவுப் பணியாளர் (நாள் 1 - 2000)
- சிற்றுண்டி தயாரிப்பவர் (நாள் 1 - 2700)

தொடர்பு 077 907 9888

(4755)




## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 216/= |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 389/= |
| 1Kg றவை | - 290/= |
| 1Kg சம்பா அரிசி | - 235/= |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 205/= |
| 1Kg நீட்டல்ப்பச்சை | - 240/= |
| 10Kg விஜிதா | - 2800/= |
| 1Kg மல்லி (M) | - 356/= |
| 1Kg உளுத்தம்பருப்பு | - 762/= |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 890/= |
| 1Kg கடலை | - 385/= |
| 1Kg சோயா | - 350/= |
| 400g விம் கட்டி | - 250/= ~~265/=~~ |

Max 01




1Kg சன்லைட் ...

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:-
happy basket.lk
இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(1319)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org